வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 08.08.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 247 | பக்கங்கள் : 16

# மேலும் 98 பேர் ஒரே நாளில் மரணம்!

## ஐந்தாயிரத்தைக் கடந்தது பலியானோர் எண்ணிக்கை

கொழும்பு, ஓக. 08

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் 98 பேர் ஒரே நாளில் உயிரிழந்த சம்பவம் இரண்டாவது நாளாகவும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதனால் இலங்கையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5ஆயிரத்தைக் கடந்துள்ளது.

மொத்த எண்ணிக்கை 5ஆயிரத்து 17 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா மரணம் குறித்த தகவலை அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதியும் 98 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர்

# பிரிட்டன் தூதுவருடன் பேச்சு நடத்த இலங்கை அரசு முடிவு

கொழும்பு, ஓக. 08

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கையின் காரணிகளை ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் பிரிட்டன் தூதுவருக்குத் தெளிவுபடுத்த அரசு தயாராகியுள்ளது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

15

# நாளொன்றுக்கு 200 முதல் 300 வரை கொரோனா மரணங்கள் பதிவாகும்!

## பேராசிரியர் சுனெத் அகம்பொடி எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 08

**எதிர்வரும் இரண்டு வாரங்களின் பின்னர் இலங்கையில் கொரோனா தொற்றினால் 150 பேர் வரையில் உயிரிழக்கக்கூடும் என தொற்று நோய் தொடர்பான விசேட வைத்தியர் சுனெத் அகம் பொடி தெரிவித்துள்ளார்.**

அவ்வாறான நிலை உருவாகுவதற்கு 90 சதவீத வாய்ப்புகள் காணப்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன என ராஜரட்டை பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவ விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் சுனெத் அகம்பொடி குறிப்பிட்டார்.

இருப்பினும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கு எம்மால் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அதற்கு நாம் இன் னும் தாமதம் இல்லை எனவும் அவர்

15

## கொரோனா நோயாளிகளுக்காக புதிய தொலைபேசி இலக்கங்கள்

கொழும்பு, ஓக. 08

கொரோனா நோயாளர்களை மருத்துவமனையில் அனுமதிக்கும்போது எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் அறிவிப்பதற்கு புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, 1999 அல்லது 0117 966366 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து உதவிகளை

15

## நாட்டில் தனியார் வைத்தியசாலைகளிலும் பெரும் இடநெருக்கடி

கொழும்பு, ஓக. 08

இலங்கையில் டெல்டா வைரஸ் தற்போது மிக வேகமாக பரவிவரும் நிலையில், தற்போது தனியார் வைத்தியசாலைகளும் கொரோனா நோயாளர்கள் நிரம்பியிருப்பதாக அறியமுடிகிறது.

எனவே, தனியார் வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளர்களை அனுமதிப்பதை தற்காலிகமாக நிறுத்தியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 08

ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை சீராக அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதன்படி, தொற்று விகிதங்களைக் குறைக்கவும், ஒட்சிசனைச் சார்ந்திருக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பேசிய சுகாதார அமைச்சின் பேரிடர் தயார்நிலை மற்றும் பதிலளிப்புப் பிரிவின் தலைவர் வைத்தியர் ஹேமந்த ஹேரத்,

டெல்டா கொரோனா வைரஸ் மாறுபாட்டால் பாதிக்கப்பட்ட நபர்களின் உண்மையான எண்ணிக்கை, அறிக்கையிடப்பட்ட புள்ளிவிவரங்களை விட மிக அதிகம்.

கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பதிவாகும் நோய்த்தொற்றுகளில் சுமார் 20-30 சதவிகிதம் டெல்டா மாறுபாட்டினால் பாதிக்கப்பட்ட தொற்றாளர்களே.

கடந்த 24 மணி நேரத்தில் நாட்டில் 20,052 பி.சி.ஆர். சோத னைகள் நடத்தப்பட்டுள்ளன-என்றார்.

15

## நேற்றும் 2,796 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஓக. 08

நாட்டில் மேலும் 2 ஆயிரத்து 796 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 27 ஆயிரத்து 19 ஆக அதிகரித்

15

# அநாவசியமாக வெளியில் எவரும் செல்ல வேண்டாம்

## மக்களிடம் அரசு கோரிக்கை

கொழும்பு, ஓக. 08

உலகில் பேரழிவை ஏற்படுத்திவரும் டெல்டா திரிபு இலங்கையிலும் அதிவேகமாகப் பரவி வருவதால் அனைவரும் விரைவாக கொரோனாத் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறும், அத்தியாவசியமற்ற தேவைகளுக்காக வீட்டிலிருந்து வெளியில் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அரசு கோரியுள்ளது.

அரச தகவல் திணைக்ககளம் இந்தத் தகவலை அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றாளர்களில் 1.5 வீதமானோர் மரணிக்கின்றனர். பெரும்பாலானோர் தீவிர சிகிச்சை பிரிவுகளிலும் சேர்க்கப்படுகின்றனர்.

எனவே, ஆட்கொல்லி வைரஸிடமிருந்து தற்காத்துக்கொள்ள பின்வரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளனர்.

■ அத்தியாவசியமான கார ணங்கள் தவிர்ந்த

15

# சிறுவர்களை வெளியில் அழைத்துச் செல்லாதீர்!

கொழும்பு, ஓக. 08

நாட்டில் சிறுவர்கள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்படுவதற்கான அதிகபட்ச சந்தர்ப்பமுண்டு. இந்த நாள்களில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சமூகத்துக்கு அழைத்துச் செல்லவேண்டாம் என்று கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் மருத்துவ வல்லுநர் சன்ன பெரேரா கேட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

“இலங்கையில் பதிவாகும் நோய்த்தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் மீது அதிக கவனம் செலுத்தவேண்டும்” என்றும் மருத்துவ வல்லுநர் சன்ன பெரேரா கூறினார்.

15

# இப்படியும் நடக்கிறது...!

ஓர் அரசு அலுவலகத்தின் பூட்டி வைக்கப்பட்டு இருந்த பதிவு அறைக்குள் (Record Room) ஒரு சின்ன இடை வெளி வழியாக ஒரு பாம்பு புகுந்து விட்டது.

அதனை, அவ்வலுவலக ஊழியர் ஒருவர் பார்த்து விட்டு, தனது மேலதிகாரியிடம் தெரியப்படுத்தினார். அவரும் தனது மேல் அதிகாரியுடன் கலந்து ஆலோசிக்க நினைத்தால் அவர் அப்போது விடுமுறையில் இருந்தார்.

ஒரு வாரம் கழித்து மேலதிகாரி வந்தவுடன், விசயத்தைக் கூறினார்கள்.

அவர் உடனே, "சரி, அந்தப் பாம்பினைப் பிடிக்க வனத்துறைக்கு கடிதம் எழுதுங்கள்" என்று கூறிவிட்டார்.

பாம்பினைப் பிடித்து தர வனத்துறைக்கு கடிதம் எழுத, அங்கு இருந்து ஒரு வாரம் கழித்து பதில் வந்தது.

"பாம்பினைப் பிடிக்கும் எங்கள் அலுவலக ஊழியர்கள் தற்சமயம் இல்லை, அவர்கள் ஒரு மாதம் பயிற்சிக்காக சென்று உள்ளனர். நீங்கள் ஒரு தனியார் பாம்பு பிடிப்ப வரை வைத்து பிடித்துக் கொள்ளுங்கள்" என்று தெரி வித்து இருந்தார்கள்.

உடனே, அடுத்து ஒரு கடிதத்தை வனத்துறைக்கு எழுதினார், அதில் "அவ்வாறு நாங்கள் தனியாரை வைத்து பாம்பு பிடித்தால், அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம் வனத்துறை மூலம் எங்களுக்கு தரப்படுமா?" என்று கேட்டு இருந்தார். அதற்கு, "இல்லை, அவ்வாறு கொடுக்கப்பட மாட்டாது, நீங்களே அதற்கு உண்டான ஊதியத்தினை அரசிடம் இருந்து பெற்று கொடுங்கள்" என்று பதில் வந்தது.

உடனே, வனத்துறையினர் அறிவுரையை மேற்கோள் காட்டி தலைமை செயலகத்திற்கு ஒரு கடிதம் எழுதினார்கள்.

அதற்கு, தலைமை செயலகத்தில் இருந்து இருவரங்களில் ஒரு பதில் வந்தது, உங்கள் அலுவலகத்தில் இதற்கு முன்னர் இது போன்ற பாம்பு புகுந்த சம்பவம் நடந்து இருக்கிறதா? என்று கேட்டு இருந்தார்கள். அதற்கு இவர்கள், இல்லை, இதுதான் முதல் தடவை என்று பதில் எழுதினார்கள்.

பின்னர் மேலும் இரு வாரங்கள் கழித்து தலைமை செய லகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் உங்களது பக்கத்துக்கு அலுவலங்களில், அல்லது உங்கள் துறை சார்ந்த வேறு அலுவலகங்களில் இது போன்ற சம்பவம் நடந்து உள்ளதா? என கேட்டு இருந்தார்கள். அதற்கும் "இல்லை" என்று பதில் அனுப்பினார்கள்.

பின்னர், சில நாட்கள் கழித்து, தலைமை செயலகத்தில் இருந்து, பாம்பு என்றால் எத்தனை பாம்பு? என்று தங்கள் கடிதத்தில் தெரியப்படுத்த வில்லை. அதனை தெளிவு படுத்துமாறு கேட்டு கடிதம் வந்தது.

பின்னர் அங்கிருந்து, அந்த ஒரு பாம்பினைப் பிடிக்க 200 ரூபா அரசு மூலம் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப் படுவதாக அரசு ஆணை வந்தது. பாம்பு பிடிப்பவரைக் கூப்பிட்டு அந்த பாம்பினைப் பிடியுங்கள், 200 ரூபா தருகிறேன் என்று கூற, அவரோ பணம் கையில் வந்தால் மட்டுமே பாம்பு பிடித்து தருவேன் என்று கூறி விட்டார்.

நீண்ட இழுபறிக்குப்பின்னர், பத்து நாட்கள் கழித்து, கருவூலம் மூலமாக பணம் பாம்பு பிடிப்பவர் வங்கிக் கணக்கிற்கு வர, அவர் பாம்பு பிடிக்க கிளம்பி வந்தார்.

வந்ததும் எந்த ரூம்? என்று கேட்க, அவர்களும் பதிவறையை கை காட்டினார்.

உள்ளே பாம்பு பிடிக்க சென்றவர், அந்தப் பாம்பினை யும் பிடிக்காமல் வெறும் கையுடன் திரும்பி வந்தார்.

அவரிடம் அனைவரும் என்ன நடந்தது? என்று கேட்க, அவரோ, நீங்கள் ஒரு பாம்பு பிடிப்பதற்கு தான் 200 ரூபா கொடுத்தீர்கள், ஆனால் உள்ளே சென்ற பாம்பு குட்டி போட்டு பின்னர் அந்த குட்டிகளும் வளர்ந்து இப்போ பல பாம்புகள் இருக்கின்றன என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்.

இந்தக் கதையை மின்அஞ்சல் மூலம் அனுப்பிவைத்த நண்பர் ஒருவர் இதனை சிறிதரன் எம்.பி.க்கு அனுப்பி வையுங்கள் என்று கேட்டிருந்தார்.

இந்தக் கதைக்கும் சிறிதரனுக்கும் என்ன சம்பந்தம் என்று திரும்பவும் கேட்டிருந்தேன். அதற்கு அவர் மறுநாள் பதில் அனுப்பியிருந்தார்.

வடக்கு மாகாணத்தில் சிவில் பாதுகாப்பு படைகள் நடத்தும் பண்ணைகளை மாகாண அரசிடம் கையளிக்கு மாறு கேட்டிருந்தார். மாகாண அரசிடம் அதனைக் கைய ளித்தால் நிர்வாகம் எப்படியிருக்கும் என்பதை அவருக்குச் சொல்ல வேண்டாமா? என்று கேட்டிருந்தார் நண்பர்.

அந்தப் பண்ணைகளில் பல தனியாருக்குச் சொந்த மானவை. அவற்றை உரியவர்களிடமே கையளிக்கக் கேட்டிருக்கலாம் என்பது அவரது வாதம்.!

- ஊர்க்குருவி

# 728,000 அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிகள் வந்து சேர்ந்தன

கொழும்பு, ஓக. 08

ஜப்பானால் வழங்கப்பட்ட 728,000 அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிகள் நேற்று நாட்டை வந்தடைந்தன.

தடுப்பூசியை ஏற்றி வந்த யு.எல்-455 ஸ்ரீலங்கன் ஏர் லைன்ஸ் விமானம் மாலை 4.17 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

ஜப்பானில் நரிதா விமான நிலையத்தில் இருந்து காலை 11.23 மணியளவில் புறப்பட்ட விமானத்தில் உலக சுகாதார அமைப்பின் அதிகாரிகள் குழு வும் வந்தது.

அதன்படி, எட்டு நாட்களில் இலங்கை 1.4 மில்லியன் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி களைப் பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை, இலங் கைக்கு 728,460 டோஸ் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி கிடைத்தது. இது ஜப்பான் அரசாங்கத்தின் நன்கொடை யாகும்.

கடந்த வாரம் வந்த தடுப் பூசி டோஸ்கள் மேற்கு மாகா ணத்தில் வசிப்பவர்களுக்கு இரண்டாவது தடவையாக ஏற்றப்பட்டன.

## வீடு ஒன்றுக்குள் மூன்று சடலங்கள்

கொழும்பு, ஓக. 08

கல்கமுவ பகுதியில் வீடு ஒன்றிலிருந்து மூன்று சடலங் களை பொலிஸார் மீட்டுள் ளனர்.

இதில், 28 வயதுடைய ஆண், 28 வயதுடைய பெண் மற்றும் 10 வயதுடைய சிறுவ னின் உடல்களே மீட்கப்பட் டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## கொரோனாவால் முதல் ஆதிவாசி உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 08

ஆதிவாசி ஒருவர் முதல் முறையாக கொவிட் 19 தொற் றினால் சிகிச்சை பயனளிக் காமல் உயிரிழந்தார்.

பண்டாரவளை அரசினர் வைத்தியசாலையிலேயே, மேற் படி மரணம் பதிவாகி உள்ளது.

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பானை என்ற ஆதி வாசிகள் கிராமத்தைச் சேர்ந்த 65 வயதுடைய எய்ச். எம். குணதாச என்ற ஆதிவாசியே உயிரிழந்தவராவார்.

இவ் ஆதிவாசி நீண்டகால மாக சிறுநீரக நோயினால் அவஸ்தைபட்டு, சிகிச்சை பெற்று வந்தவராவார்.

இவர் நோய் காரணமாக, பண்டாரவளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் இவர் பி.சி. ஆர். பரிசோதனைகளுக்கு உட் படுத்தப்பட்டிருந்தவேளை, கொவிட் 19 தொற்றுக்கு உள் ளானமை தெரியவந்தது.

ஆதிவாசிகளின் முதல் மரணம் இதுவென பதிவாகியுள்ளது.

தம்பானை ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரியலாகே வன்னில அத்தோ, தமது கிரா மத்தைச் சேர்ந்த ஆதிவாசியொ ருவர், கொவிட் 19 தொற்றி னால் உயிரிழந்திருப்பதையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

## கல்வி TV CHANNEL-1

08.08.2021
ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி TV CHANNEL - 2

08.08.2021
ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
08.08.2021 ஞாயிற்றுக்கிழமை

பிலவ வருடம், ஆடி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# பஸில் எங்கே?

நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுத்தல் என்னும் சுலோகத்தின் கீழ்தான், பஸில் ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது. பொதுஜன பெரமுனவின் கட்சித் தொண்டர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் அப்படியானதொரு செய்திதான் வழங்கப்பட்டது. அதேவேளை டக்ளஸ் தேவானந்தா போன்ற அரச ஆதரவு தமிழ் அரசியல்வாதிகள் கூட, பசிலின் வரவு தொடர்பில் நம்பிக்கை வெளியிட்டிருந்தனர். ஆனால் விடயங்களில் பெரியளவில் முன்னேற்றங்கள் எவையும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

நாடு தற்போது டெல்டா அலையை எதிர்கொண்டுள்ளதாக கூறப்படும் நிலையில், நிலைமைகள் மேலும் மோசமடைந்து செல்கின்றது. இந்த நிலையில் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் பசில் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. பசில் அமைதியாக காய்களை நகர்த்துகின்றாரா அல்லது பஸிலால் முடியவில்லையா?

தனிநபர்கள் என்னதான் ஆற்றலுள்ளவர்களாக இருந்தாலும், பிரச்னைகளோ அவர்களை விடவும் மிகவும் பெரியது. நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளிலிருந்து, நாட்டை மீட்டெடுக்க வேண்டுமாயின், புதிய பொருளாதார அணுகுமுறை ஒன்று தேவைப்படுகின்றது. ஆனால் பொருளாதார நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. இலங்கையின் பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை என்பது திடிரென்று ஏற்பட்ட ஒன்றல்ல.

இலங்கையை மாறி, மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை அடக்கி ஒடுக்குவதிலேயே தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்திவந்திருக்கின்றனர். இதன் காரணமாக, இலங்கைத் தீவு பல தசாப்தங்களாகவே ஓர் அரசியல் ஸ்திரமற்ற நிலைக்குள்ளேயே இருக்கின்றது. ஒரு நாட்டின் அரசியல் நிலைமைகள் பலவீனமாக இருக்குமானால் பொருளாதார ரீதியில் முன்னோக்கி பயணிக்க முடியாது. இப்போதும் கூட தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்னைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை காண்பதில் ஆட்சியாளர்கள் சிறிதும் அக்கறையற்வர்களாகவே இருக்கின்றனர். இனப்பிரச்னை என்று ஒன்றில்லை என்பதை நீரூபிப்பதிலேயே அரசாங்கம் முழு மூச்சுடன் இயங்கிவருகின்றது.

ஒரு காலத்தில் சிங்கப்பூரின் ஜனாதிபதி லிக்குவான் யூ, இலங்கையை போன்று, சிங்கப்பூரை மாற்ற வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தார். ஆனால் இன்று சிங்கப்பூர் எந்த நிலையிருக்கின்றது? இலங்கை எந்த நிலையில் இருக்கின்றது? இதற்கு யார் காரணம்?

விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கும் வரையில் இலங்கையில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை காண்பதில் புலிகளே தடையாக இருக்கின்றனர் என்றே சிங்கள ஆளும் தரப்புக்கள் பிரச்சாரங்களை முன்னெடுத்துவந்தன. இன்று, உள்நாட்டு யுத்தம் முடிவுற்று 12 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட, ஆகக் குறைந்தது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் உரிமைகளை கூட முழுமையாக அமுல்படுத்துவதை அரசாங்கம் தடுத்து வருகின்றது. நாடு இந்த நிலையில் இருக்கின்ற போது கூட, நெருக்கடியை பயன்படுத்தி, எப்படி மேலும் தமிழர் நிலங்களை சூறையாடலாம் என்றே தெற்கு கணக்குப் போடுகின்றது.

இப்போதும் கூட தவறுகளை சரிசெய்ய ஆட்சியாளர்கள் முயற்சிக்கவில்லை. ஒரு நாடு நெருக்கடிகளிலிருந்து மீள வேண்டுமாயின், புதிய சிந்தனைகள் அவசியம். இலங்கையை பொறுத்தவரையில் அவ்வாறானதொரு புதிய சிந்தனை தெற்கிலிருந்துதான் எழ வேண்டும். ஒரு அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை பேணிப் பாதுகாத்துக் கொண்டு, நாட்டை பொருளாதார ரீதியில் ஒரு போதுமே தூக்கிநிறுத்த முடியாது. ஒரு பஸில் அல்ல நூறு பஸில்கள் வந்தாலும் நிலைமைகள் மாறப் போவதில்லை.

# பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் வீடு வாடகைக்கு விடப்பட்டுள்ளதா?

*சில இந்திய ஊடக வட்டாரங்கள், பாகிஸ்தானில் உள்ள பிரதமர் இல்லம் வாடகைக்கு விடப்பட்டிருப்பதாகவும், அந்நாட்டில் அதிகரித்துவரும் பொருளாதாரச் சிக்கலை சரிசெய்யும் முயற்சி இது எனவும் தெரிவிக்கின்றன.*

*பாகிஸ்தானில் உள்ள ஆங்கில இணையத்தளமான சாமா நியூஸ் வெளியிட்ட செய்தியை மேற்கோள் காட்டிய இந்திய நாளிதழ்கள், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இல்லம் வாடகைக்கு விடப்பட்டிருப்பதாகவும், இது ஒரு பெரிய அவமானம் என்றும் தெரிவிக்கின்றன. சரிந்திருக்கும் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கான முயற்சி இது எனவும் அவை குறிப்பிட்டன.*

*கச்சேரிகள், விழாக்கள், பஷன் நிகழ்ச்சிகள், கலாசார நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்திக்கொள்ளும் சமூகக் கூடமாகப் பிரதமரின் வீட்டைப் பயன்படுத்திக்கொள்ள ஒன்றிய அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளதாக அந்த செய்தி தெரிவித்தது. இதுபோன்ற நிகழ்ச்சிகளின்போது வீட்டின் கண்ணியமும் ஒழுங்கும் குலையாமல் பார்த்துக்கொள்வதற்காக இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. "இம்ரான் கானின் பதவிக் காலம் பல அவமானங்கள் நிறைந்தது என்றாலும், இது மிகவும் மோசமானது" என்றுகூட ஒரு செய்தி இணையத்தளம் குறிப்பிட்டிருந்தது.*

*சில இணையதளங்கள் இன்னும் பரபரப்பூட்டும் வகையில் தலைப்புகளை எழுதின.*

*"உடைந்தப் பொருளாதாரம், வேறு வழியின்றி பாகிஸ்தான் தனது பிரதமரின் வீட்டை வாடகைக்கு விடுகிறது"*

*"பொருளாதாரத்தை இழந்த பாகிஸ்தான் தனது பிரதமரின் வீட்டை வாடகைக்கு விடுகிறது"*

*"எருமைகளின் ஏலத்தை அடுத்து பணத்துக்காக பாகிஸ்தான் அரசு செய்த முயற்சி: பிரதமரின் வீடு வாடகைக்கு"*

**உண்மையில் நடந்தது இதுதான்**

*பாகிஸ்தான் பிரதமரின் தலைமைச் செயலக வட்டாரங்களுடன் பி.பி.சி பேசிய போது, அண்மைய கூட்டங்களில் இப்படி ஒரு விடயம் விவாதிக்கப்பட்டது உண்மைதான் என்றும், அது ஏற்ககப்படவும் இல்லை, இதற்காக கமிட்டிகள் போடப்படவும் இல்லை என்பது தெரியவந்தது.*

*பிரதமர் இம்ரான்கான் குண்டுதுளைக்காத கார் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டார். பின்னர் அது ஏலம் விடப்பட்டது.*

*பதவியேற்ற சில வாரங்களிலேயே அந்த வீட்டிலிருந்து வெளியேறிய இம்ரான் கான், இஸ்லாமாபாத்தின் பனிகலா பகுதியில் உள்ள தன் சொந்த வீட்டிலேயே தங்கிக்கொள்வதென்று முடிவெடுத்திருக்கிறார். ஆகவே அதிகாரபூர்வ வீடு காலியாகவே இருக்கிறது என்பதால் இதை இம்ரான்கான் வரவேற்றார் என்று சொல்லப்படுகிறது.*

*இந்த யோசனையை எதிர்த்த சிலர், இது ஒரு அரசாங்க சொத்து எனவும், இதற்கு அடையாளரீதியாக ஒரு மதிப்பு இருக்கிறது எனவும் தெரிவித்தனர். இதை வாடகைக்கு விடுவது பிரதமர் பதவியுடைய புனிதத் தன்மையை கெடுக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர். ஒருமித்த கருத்து எட்டப்படாததால் இந்த யோசனை கைவிடப்பட்டது.*

*பிரதமர் வீடு இஸ்லாமாபாத்தின் மத்தியப் பகுதியில் இருக்கிறது. இது 1096 கனல் பரப்பளவில் கட்டப்பட்டது.*

*(கனல் என்பது பாகிஸ்தானிலும், வட இந்தியாவிலும் பயன்படுத்தப்படும் நில அளவை அலகு. வெவ்வேறு இடங்களில் இது குறிக்கும் அளவு வேறு என்றாலும், தோராயமாக ஒரு கனல் என்பது ஒரு ஏக்கரில் 8ல் ஒரு பங்கு).*

**பின்னணி**

*எளிமை, துறவு மனப்பான்மை ஆகியவற்றுக்கான அடையாளமாகவே இம்ரான்கான் வளர்ந்துவருகிறார். தேர்தல் பிரசாரத்தின் போது பிரதமரின் வீட்டை ஒரு அரசுப் பல்கலைக்கழகமாக மாற்றப்போவதாகத் தெரிவித்த அவர், இது பொது சொத்தை வீணடிக்கும் வேலை எனவும், இதுபோன்ற கட்டடங்கள் காலனியாதிக்க காலத்தின் எச்சம்தான் எனவும், அரசியல் மேட்டுக்குடிகள் அரசு வளங்களை சுரண்டும் வழி இதும் எனவும் தெரிவித்தார்.*

*ஒகஸ்ட் 2019 இல் பிரதமராகப் பதவி ஏற்ற பின்பு அந்த வீட்டிலிருந்து வெளியேறினார். "எளிமையான வாழ்க்கை வாழ்வேன், உங்கள் பணத்தை வீணடிக்க மாட்டேன்" என்று உறுதியளித்தார்.*

*பதவியேற்றபின்பு ஆற்றிய முதல் உரையில், "மூன்று படுக்கையறை கொண்ட ராணுவ செயலாளரின் வீட்டில் வசிப்பேன்" என்று தெரிவித்தார். "பிரதமரின் வீடு ஒரு பல்கலைக்கழகமாக மாற்றப்படவேண்டும் என்று விரும்புகிறேன். பல்கலைக்கழகத்தை அமைக்க சரியான இடம் அது" என்று தெரிவித்தார். பிறகு தன் சொந்த வீட்டுக்குக் குடிபெயர்ந்தார்.*

*அதன்பிறகு ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பில் ஒரு கேபினட் அமைச்சர் பேசும் போது, ஆண்டுக்கு 47 கோடி ரூபா செலவு செய்து பிரதமர் இல்லம் பராமரிக்கப்படுகிறது என்றார். பிரதமரின் வீட்டுக்குப் பின்னால் உள்ள நிலத்தில் கூடுதல் கட்டுமானம் செய்து, அங்கு உயர்தரப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என்றார்.*

*ஜூலை 2019 இல் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக, இஸ்லாமாபாத் பெருந்திட்டத்தில் ஒரு மாறுதலுக்கு ஒப்புதல் அளித்தது ஒன்றிய கபினட். பிரதமர் இல்லம் உள்ள ஜி-5 பகுதியில் கல்வி நிறுவனங்கள் அமைக்கக்கூடாது என்றும், அந்தப் பகுதி அரசு மற்றும் நிர்வாகக் கட்டடங்களுக்கானது என்றும் ஒரு விதி இருந்தது. அது மாற்ற்றியமைக்கப்பட்டது.*

*ஆனாலும் பல்கலைக்கழகம் கட்டும் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.*


*பிரதமரின் வீட்டை ஒரு அரசு அலுவலகமாக மாற்றும் திட்டம் பற்றிய யோசனை வந்திருப்பது முதல் முறையல்ல.*

**கார்கள், எருமைகள், கட்டடங்கள்**

*தன் எளிமையில் ஒரு பகுதியாக, புல்லட் ஃப்ரூப் வண்டிகளை இம்ரான் கான் பயன்படுத்தவில்லை. அவை பின்னாட்களில் ஏலம் விடப்பட்டன.*

*(14ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஓகஸ்ட் - 08 ஞாயிற்றுக்கிழமை**
**பிலவ வருடம் - ஆடி 23**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | அமாவாசை |




**மேடம்**
முன்பு சுலபமாக நிறைவேறியவற்றிற்கும் முயற்சி தேவை. அன்னை பற்றிய கவலை வேண்டாம். வாகனம் வாங்குவீர்கள். செலவு ஒன்று ஏற்படும். அதனால் நன்மை வரும்.

**இடபம்**
உழைப்பால் நன்மை வரும். நல்லவர் ஆலோசனை கிடைக்கும். நல்ல செய்தி பெறுவீர்கள். வெற்றி உண்டு. பயம் நீங்கும். நடவடிக்கைகளில் கவனம் வைத்தால் பழிச்சொல் வராது.

**மிதுனம்**
எதிர்ப்பவர்களைத் தன்வசப்படுத்தும் திறமை வரும். நேர்மையான செயல்பாட்டினால் மன நிம்மதி பெறுவீர்கள். குடும்பத்தில் தம்பதிகளிடையே கருத்து ஒற்றுமை வரும்.

**கடகம்**
சிறு பரிசுகள், அன்பளிப்பு கிடைக்கும். கவலை மறக்கும். முன்பிருந்ததைக்காட்டிலும் பணியில் வேலைப்பளு குறையும். முயற்சியின் காரணமாகப் பணவரவு சற்றே அதிகரிக்கும்.

**சிம்மம்**
கருத்து வேறுபாடுகளால் பிரிந்த குடும்பங்கள் சேரும். புதிய வேலை தேடியவர்களுக்கு வாய்ப்பு கண்ணில் படும். பிள்ளைகளின் கல்வி, பணி பற்றிய கவலைகள் தீரும்.

**கன்னி**
நிம்மதியான நாள். நெருங்கிய உறவினரிடமிருந்து செய்தி வரும். நீங்கள் நினைத்துப் பாராதவர்கள் உங்கள் உதவியை நாடுவர். நண்பர்கள், உறவினர்களிடையே இருந்த பகை மாறும்.

**துலாம்**
சேமிக்கத் தொடங்குவீர்கள். நண்பர்களால் சிறு ஆதாயம் உண்டு. சமீபத்தில் வாங்கிய பொருள் அல்லது பங்கின் பண மதிப்பு உயரும். யாரைப் பற்றியாவது வம்பு பேசினால் இக்கட்டு வரும்.

**விருட்சிகம்**
பணவரவுகள் முன்பின்னாக இருந்தாலும் செலவு கட்டுக்குள் இருக்கும். துன்பங்கள் தீரும். தொடர்பு விட்டுப்போன உறவினர் வருவார். பொறாமைக்காரர்களால் ஏற்பட்ட பிரச்னை தீர்ந்து போகும்.

**தனுசு**
நேற்றைய பிரச்னை முழுவதுமாய்த் தீர்ந்து நிம்மதி வரும். யாரிடமும் பகை வேண்டாம். சிறு இடரைச் சமாளிக்க வேண்டியிருக்கும். பிள்ளைகளின் கல்வி மற்றும் எதிர்காலம் பற்றிய பயம் தீரும்.

**மகரம்**
திறமைகளை வெளிப்படுத்த முடியாதபடி இருந்த தடை நீங்கும். சுப நிகழ்ச்சி நல்லபடி நடப்பதற்கான கடும்முயற்சியில் வெல்வீர்கள். முன்னேற்றத்தில் இருந்து வந்த தடை ஒன்று விலகும் நாள்.

**கும்பம்**
குழந்தைகள் குறிக்கோளை அடைவதற்கான முயற்சியில் ஆதரவு அதிகரிக்கும். கடனைத் திருப்பி தருவீர்கள். பழைய சிக்கல் ஒன்று தீரும். ஆடம்பரச் செலவுகள் கூடாது.

**மீனம்**
இனிமையான நபர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுது கழியும். முயற்சிக்கு நல்ல பலனும், விருதுகளும், பரிசுகளும் கிடைக்கும். விரும்பிய விஷயம் ஒன்றை முடிப்பீர்கள். நல்லவர் நட்பு உண்டு.

## இன்று ஆடி அமாவாசை:
# பித்ருக்களுக்கு வழிபாடு அவசியமா?

**வி.ரி.சகாதேவராஜா**



இந்துக்களுக்கு மிக முக்கியமான நாளாக ஆடி அமாவாசை இன்றாகும். இந்த மாதத்தில் வருகிற ஆடி அமாவாசை இன்று ஞாயிற்றுக் கிழமை வருகின்றது.

இன்றைய தினம் தான் நம்முடைய முன்னோர் பித்ருலோகத்தில் இருந்து நம்மை காண்பதற்காக புறப்படுகின்றன.

நம்முடைய குடும்பம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்க எதிர்காலம் சிறப்பாக இருக்க நம்முடைய சந்ததிகள் மகிழ்ச்சியாகவும் சிறப்பான வாழ்வு வாழ நம்முடைய முன்னோர்களின் அருளும் ஆசியும் அவசியம். இன்று நாம் சந்திக்கும் கடன் பிரச்னை தொடங்கி மனதில் அமைதியின்மை வரை பல்வேறு பிரச்னைகளுக்கு காரணம் நாம் நம்முடைய முன்னோரை வணங்க மறந்ததுதான் என்கிறது நம்மு டைய சாஸ்திரங்கள்.

**ஆடி அமாவாசை எப்போது?**

2021ம் ஆண்டு இவ்வருடம் ஆடி அமாவாசை இன்று 23ம் திகதி (ஓகஸ்ட் 8) ஞாயிற்றுக் கிழமையில் வருகிறது.

நேற்று ஓகஸ்ட் 7ஆம் தேதி சனிக்கிழமை இரவு 7.38 மணிக்கு அமாவாசை தொடங்கி இன்று ஓகஸ்ட் 8ஆம் திகதி இரவு 7.56 மணி வரை நீடிக்கிறது. அதனால் ஓகஸ்ட் 8 அன்று சூரிய உதயத்திற்கு பின் எப்போது வேண்டுமென்றாலும் அமாவாசை தர்ப்பணம் கொடுக்கலாம்.

அமாவாசை அன்று முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்து வழிபடுவது வழக்கம். அதிலும் தட்சிணாயன துவக்க காலத்தில் வரும் ஆடி அமாவாசை அன்று முன்னோர்கள் வழிபாடு மிகவும் சிறப்பானதாகும்.

ஆடி அமாவாசை அன்று முன்னோர் வழிபாடு காலையிலேயே துவங்கி விட வேண்டும். அன்றைய தினம் ஏதேனும் ஒரு தீர்த்தக்கரையில் முன்னோர்களுக்கான அமாவாசை தர்ப்பணம் செய்து வர வேண்டும்.

தர்ப்பணம் என்றால் எள்ளும் தண்ணீரும் விடவேண்டும். அமாவாசை என்றால் எள்ளும் தண்ணீரும் விடவேண்டும்.

**தர்ப்பணம் எதற்காகச் செய்யவேண்டும்?**

அமாவாசை முதலான நாளில் முன்னோர்களுக்கு எள்ளும் தண்ணீரும் கொண்டு தர்ப்பணம் செய்யும் போது அது நம் முன்னோர்களைப் போய்ச் சேரும். அதனால் அவர்கள் செய்த பாவங்களின் கெடு பலன்கள் குறையும். புண்ணியங்கள் பெருகும். நாமும் முன்னோரை வணங்கிய பலனைப் பெறலாம். முன்னோருக்குப் புண்ணியம் சேர்த்தஇ பாவங்களைக் குறைத்த புண்ணியத்தைப் பெறலாம் என்கிறார்கள் ஆச்சார்யர் கள்.

**சரி... யாரெல்லாம் தர்ப்பணம் செய்யவேண்டும்? செய்யக்கூடாது?**

தாயும் தந்தையும் இல்லை என்றிருப்பவர்கள் அவசியம் தர்ப்பணம் செய்யவேண்டும். நம் தாய் தந்தையரைத் தவிர, முந்தைய முன்னோர்களை நமக்குத் தெரிந்திருக்கலாம். தெரியாமல் இருக்கலாம். ஆனால் அவர்களை மனதால் நினைத்து அவர்களுக்கு நன்றி சொல்லும் நன்னாள்தான் அமாவாசை தினங்கள். முக்கியமாக... ஆடி அமாவாசையில் வணங்கவேண்டும்.

**ஆடி அமாவாசை விரதம் :**

அமாவாசை தினத்தில் ஆண்கள் விரதமிருந்து தர்ப்பணம் கொடுக்க வேண்டும். அதே சமயம் பெண்கள் கண்டிப்பாக அமாவாசை விரதம் இருக்கக் கூடாது. பெண்கள் அமாவாசை விரதம் இருப்பதில் சில விதி முறைகள் நிறைந்திருக்கிறது.

முன்னோர்களுக்கு பிடித்த உணவுகளை மதிய உணவிற்கு சமைத்து அதை மறைந்த முன்னோர்களின் புகைப்படங்களுக்குப் பொட்டு வைத்து பூ வைத்து ஆர்கள் முன் ஒரு இலையில் சமைத்த உணவுகளைப் படைக்க வேண்டும். பின்னர் படங்களுக்கு தீபா ராதனை செய்த பின்னர் அவசி யம் காகத்திற்கு உணவு வைக்க வேண்டும்.

அதன் பின்னர் இலையில் முன்னோர்களுக்காகப் படைத்த உணவை வீட்டில் உள்ள மூத்தவர் சாப்பிட வேண்டும். அதன் பின்னர் மற்றவர்களும் சாப்பிடலாம். இதனால் நம் முன்னோர்கள் மகிழ்ந்து அவர்களின் ஆசி நமக்கு பரிபூரணமாகக் கிடைக்கும் என்பது ஐதிகம்.

பித்ருக்களை நினைத்து நாம் வழங்கும் தர்ப்பண பூஜைகள் நமக்கு செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் அனைத்துக்கும் மேலாக சொர்க்க பேறு என எல்லா விதமான பலன்களையும் அளிக்கும் என்று மகாபாரதம் சொல்கிறது.

மறைந்த நம் முன்னோர் பித்ருலோகத்தில் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் சந்ததியினரைக் காண ஒவ்வொரு ஆண்டும் ஆடி அமாவாசை அன்று பித்ருலோகத்தில் இருந்து புறப்படுகின்றனர். அவர்களுக்கு எள் தண்ணீர் வைத்து தர்ப்பணம் செய்து வழிபடுவது மகிழ்ச்சியாக அவர்கள் பயணம் தொடங்க துணையாக இருக்கும்.

ஆடி அமாவாசை அன்று புறப்பட்ட அவர்கள் புரட்டாசி மாதம் வரும் மஹாலய அமாவாசை நாளில் பூமிக்கு வந்து சேருவார்கள். அன்றைக்கு நாம் அளிக்கும் தர்ப்பணம் அவர்களுக்கு சென்று சேர்ந்து அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

கடைசியாக தை மாதம் வரும் அமாவாசை அன்று அவர்கள் நம் வீட்டுக்கு வந்து ஆசி வழங்குவார்கள். அன்று நாம் அளிக்கும் தர்ப்பணத்தைப் பெற்றுக்கொண்டு அன்றைய தினம் அவர்கள் மீண்டும் பித்ருலோகத்துக்கு புறப்படுவார்கள். அவர்களை மகிழ்ச்சியாக வழியனுப்புவதன் மூலம் அவர்களின் ஆசியை பெறலாம் என்கின்றது நம்முடைய வேதம்.

நம் முன்னோர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வரும் சிராத்த திதி நாள் அன்று அவர்களுக்கு வழிபாடு செய்து எள்ளும் நீரும் விட்டுப் படைக்க வேண்டும். தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் திதி நாள் தெரிந்தும் அன்று எள்ளும் தண்ணீரும் வழங்காமல் தானம் கொடுக்காமல் காகத்துக்கு உணவிடாமல் அலட்சியமாக இருந்தால் பித்ரு தோஷம் பற்றிக்கொள்ளும் என்கின்றது வேதம்.

நமக்கு உடலையும் உயிரையும் கொடுத்தவர்கள் நம் முன்னோர்கள். அவர்கள் விஷயத்தில் அலட்சியமாக இருத்தல் கூடாது. அனைத்து வளங்களையும் பெற்றுச் சிறப்பான வாழ்வு வாழ பித்ருக்களுக்கு உரிய நாளில் அவர்களுக்கு உரியதை வழங்கி அவர்களைத் திருப்தியாக வைத்திருப்பது கட்டாயம்! ■

# கொவிட்-19, டெங்கு இரண்டினதும் அறிகுறிகள் ஒரே மாதிரியானவை

## காய்ச்சல் ஏற்பட்டால் மருத்துவரை நாடவும்

கொழும்பு, ஓக. 08

**கொவிட் -19 தொற்று நோயால் முழு சுகாதார ஊழியர்களும் பாதிக்கப்படும் நேரத்தில் டெங்கு பரவுவது அதிகரித்தால், சுகாதார அமைப்பு கடுமையான ஆபத்தில் இருக்கக்கூடும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.**

இந்த அபாயத்தைத் தவிர்க்க, வீடுகள், அலுவலக வளாகங்கள், கட்டுமானத் தளங்கள் மற்றும் பிற இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை சுத்தமாக வைத்திருக்குமாறு மருத்துவர்கள் பொதுமக்களை வலியுறுத்துகின்றனர்.

இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர், சிறப்பு மருத்துவர் சுதத் சமரவீர இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

கொவிட்-19 மற்றும் டெங்கு இரண்டும் வைரஸ் மற்றும் இரண்டு நோய்களின் அறிகுறிகளும் ஒரே மாதிரியானவை. எனவே காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாடவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# போலியான கருத்துக்களை வெளியிடும் திலீபன் எம்.பி.

வவுனியா, ஓக. 08

வவுனியா நகரஅபிவிருத்தி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் போலியான கருத்துக்களை முன்வைத்து வருவதாக வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

100 நகரங்களின் அபிவிருத்தி தொடர்பாக தெளிவான விளக்கம் ஒன்றை அண்மையில் வழங்கியிருந்தேன். இது ஒரு வேடிக்கையான கருத்து என்று பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவித்திருக்கிறார். அந்த நிதியை ஒதுக்குவதற்கு தாங்களே முயற்சி செய்ததாக ஒரு போலியான கருத்தையும் அவர் முன்வைத்திருந்தார்.

இந்த திட்டம் ஒரு வருடத்துக்கு முன்பாகவே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாவட்ட அரசஅதிபர், சபை உறுப்பினர்கள் ஆகியோர் இது தொடர்பான கள விஜயத்துக்கு நேரடியாக வந்திருந்தனர். இது தொடர்பாக நகரசபைக்கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதனை யார் செய்தார்கள் என்பது முக்கியமான விடயமல்ல. அபிவிருத்தித் திட்டங்கள் யாரால் வந்திருந்தாலும் மக்களின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தின் அடிப்படையிலேயே நாம் செயற்பட்டு வ்வருகின்றோம். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி மூலம் இந்த திட்டம் வழங்கப்பட்டிருந்தது. மாறாக அரசியல்வாதிகளின் தனிப்பட்ட கோரிக்கைக்ககாக இந்த நிதி வழங்கப்படவில்லை.

அத்துடன் வடக்கில் 46 ஆயிரம் பேருக்கு தாம் வேலை வாய்ப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவையெல்லாம் உங்களது கடமையே. அதனைச் சொல்லிக் காட்டி விளம்பரம் தேடவேண்டிய அவசியம் இல்லை. அதற்காகவே மக்கள் உங்களுக்கு வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பியிருக்கின்றார்கள். நான் அதைச் செய்தேன், இதைச் சேய்தேன் என்று எதிர்கால அரசியலுக்காக கருத்துப்பகிர்வது அழகான விடயமல்ல,

இவ்வாறான போலியான கருத்துக்களை சொல்பவர்களை மக்கள் இனம்காணவேண்டும்- என்றார்.

# தடுப்பூசியை பெறுங்கள்

கொழும்பு, ஓக. 08

வேகமாகப் பரவி வரும் கொவிட் -19 டெல்டா விகாரத்திலிருந்து உயிர்களைக் காப்பாற்ற உடனடியாக கோவிட்-19 தடுப்பூசியைப் பெறுமாறு அரசு மக்களை வலியுறுத்துகிறது.

அரச திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "ஒவ்வொரு நபருக்கும் நோய் தாக்கும் அபாயம் உள்ளது" என்று கூறியுள்ளது.



# யாழில் வழிப்பறியில் ஈடுபட்ட இரண்டு பேர் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 08

கடந்த 3 மாதகாலமாக யாழ்ப்பாணத்தில் வீதியில் பயணிப்போரிடம் வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் கோப்பாய் பிரதேசத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரின் தொலைபேசி,50 ஆயிரம் ரூபா பணம், கைப்பை மேலும் பல ஆவணங்களை திருடிச் சென்றமை,

யாழில் பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் ஒருவரின் கைத்தொலைபேசியை திருடிச் சென்றமை, சுன்னாகம் பகுதியில் ஆசிரியர் ஒருவரின் கைப்பை, இரண்டு தொலைபேசி, முப்பதாயிரம் ரூபா பணம் கொள்ளையடித்தமை,

மானிப்பாயில் நபர் ஒருவரின் கைப்பை திருடியமை ஆகிய சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கொள்ளையிடப்பட்ட பணம் மற்றும் கைப்பை மற்றும் ஏனைய ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவர்கள் போதைவஸ்து பாவனையாளர்கள் என்பதால் தமக்கு குடிப்பதற்குப் பணம் தேவைப்பட்டதால் வழிப்பறியில் ஈடுபட்டதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் சாவகச்சேரி பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர்.

# பேரணி உட்பட வெளிப் போராட்டங்களை ஆசிரியர்கள், அதிபர்கள் இடைநிறுத்தினர்

கொழும்பு, ஓக. 08

சம்பள முரண்பாடுகளை நீக்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளின் அடிப்படையில் நாடு முழுவதும் உள்ள தங்களது வெளிப்புற போராட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

தொழிற்சங்கங்களின் கூற்றுப்படி, கொவிட்-19 தொற்றுநோயை எதிர்கொண்டுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு, மருத்துவர்களின் ஆலோசனை மற்றும் கோரிக்கைகளின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்கங்கள் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கித் தொடங்கிய நடைபயணத்தை நிறுத்த தொழிற்சங்கங்கள் முடிவு செய்தன.

அணிவகுப்பின் முடிவில், ஆசிரியர் சங்கத் தலைவர்கள் தொழிற்சங்கத் தலைவர்கள், நேற்று முதல் வெளிப் போராட்டங்களை நிறுத்த முடிவு செய்ததாகவும், கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகும் முடிவு தொடரும் என்றும் தெரிவித்தனர். (அ)

# நீங்கள் நல்லவர்களாக சமூகத்தில் வாழ்ந்தால்தான் சிறையிலுள்ள ஏனையோரையும் விடுவிக்கமுடியும்

## முன்னாள் போராளிகளிடம் இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 08

முன்னரைப் போல இனியும் பிழையான வழியில் செல்லாது சரியான பாதை நோக்கி நல்வழியில் பயணியுங்கள் என முன்னாள் போராளிகளுக்கு இராணுவத் தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் முன்னாள் போராளிகளுக்கு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபின் முன்னாள் போராளிகளை சந்தித்து கலந்துரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள் சிலர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர்.



"நீங்கள் இன்று சமூகத்தில் நல்லவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் சிறையில் இருக்கும் ஏனையோரையும் விடுவிக்க கூடியதாக இருக்கும். உங்கள் விடுதலையைப் பற்றி பார்க்கிறார்கள் - அவதானிக்கிறார்கள். எனவே நீங்கள் சமூகத்தில் நல்லவர்களாகச் செயற்பட வேண்டும்.

அதாவது முன்னரைப் போல பிழையான வழிகளில் செல்லாது சரியான பாதை நோக்கி செல்லுங்கள். பழையவற்றை மறந்து நல்லதை சிந்தித்து சமூகத்தில் உள்ளோர் உங்களை நல்லவர்கள் என்று சொல்லும் அளவுக்கு உங்களது வாழ்க்கையை கொண்டு செல்லுங்கள்.

இராணுவம் என்ற ரீதியில் நாங்கள் முன்னாள் போராளிகளாகிய உங்களுக்கு எங்களாலான உதவிகளை செய்ய தயாராக இருக்கின்றோம். அதாவது வீடு கட்டித் தருவது என்றாலும் சரி, வேறு ஏதாவது உதவி என்றாலும் நாங்கள் அதை செய்யத் தயாராக உள்ளோம். ஏனென்றால் அது எமது கடமையாகும்.

குறிப்பாக நீங்கள் முன்னாள் போராளிகள் நீங்கள் எமக்கு எதிராகத்தான் சண்டையிட்டீர்கள். அதையெல்லாம் மறந்து இராணுவத்தினர் ஆகிய நாம் உங்களுக்கு உதவி செய்ய தயாராக இருக்கின்றோம்.

அதாவது உங்களை எமது சகோதரர்களாகப் பார்க்கின்றோம். எனவே நீங்களும் அதேபோல் நேரான பாதையில் பயணியுங்கள். உங்களது விடுதலை அனைவராலும் பார்க்கப்படுகின்ற விடயம் ஆகும்.

எனவே நீங்கள் சமூகத்தில் நல்லவர்களாக இருந்து செயற்படுவதன் மூலம் ஏனைய உங்களைப் போன்றவர்களையும் விடுவிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகும்" என்றும் இராணுவத் தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (அ-3)

# முடக்க நிலை அறிவிக்கப்படாவிட்டால் சுகாதாரத்துறை முற்றாக செயலிழக்கும்!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 08

**இலங்கையில் முடக்க நிலை அமுல் செய்யப்படாவிட்டால் அடுத்த இரண்டு வாரங்களில் நாட்டில் சுகாதாரத்துறை முற்றாக செயலிழந்து போகும் அபாயம் உள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.**

**நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கையில் 98 கொரோனா மரணங்கள் அறிவிக்கப்பட்டன. அத்துடன், கொழும்பில் டெல்டா திரிபு வைரஸ் மிக விரைவாகப் பதிவாகிவரும் நிலையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொவிட் 19 தொற்று நோயாளர் தொகை முன்னெப்போதும் இல்லாதவாறு வேகமாக அதிகரித்து வருகிறது. தொற்று நோயாளர் தொகை இதே போக்கில் அதிகரித்தால் வைத்திய சாலைகளில் அவற்றின் பராமரிப்பு திறன்களை முற்றாக இழந்துவிடும் என பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இப்போது நாட்டின் நிலைமை மிகவும் ஆபத்தானது. அத்துடன், சோகமானது எனவும் அவர் கூறினார்.

நிலைமை மோசமடையலாம் என நாங்கள் ஒரு மாதத்துக்கு முன்பே எச்சரித்தோம். ஆனால் பொதுமக்களோ அல்லது சுகாதார அதிகாரிகளோ எங்கள் எச்சரிக்கையைக் கண்டுகொள்ளவில்லை எனவும் உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

இலங்கையில் 2020 மார்ச் மாதத் தொற்றுநோய் தொடங்கியதில் இருந்து பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் தடமறிதல், தனிமைப்படுத்தல் உள்ளிட்ட விவகாரங்களுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பொறுப்பாக உள்ளனர். நாடு முழுவதும் 1,793 பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தற்போது கடமையில் உள்ளனர்.

இதேவேளை, நாடு முழுவதும் இடம்பெற்று வரும் போராட்டங்களால் வைரஸ் பரவல் மேலும் வேகமடையலாம். தொற்று நோயாளர் தொகை அதிகரிப்புக்கு ஏற்றால் போல் மரணங்களும் அதிகரிக்கும் என உபுல் ரோஹண சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகளை நீக்கப்பட்டமை, திருமணங்கள் உள்ளிட்ட உட்புற நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கியமை மற்றும் அனைத்து அரச ஊழியர்களையும் பணிக்குச் செல்லுமாறு வலியுறுத்தியமை போன்ற அரசின் நடவடிக்கைகளும் கொரோனா தீவிரமாகப் பரவவித்திட்ட காரணிகளாக அமைந்ததாகவும் பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் கூறினார்.

காரணம் எதுவாக இருந்தாலும் தொற்று நோயாளர் தொகை தொடர்ந்து அதிகரிகரித்து வருவது கவலைக்குரியது. கடந்த சில நாட்களாக தினசரி தொற்று நோயாளர் தொகை 2,500 க்கும் மேல் அதிகரித்துள்ளதால் சமாளிக்க முடியாமல் சுகாதாரத் துறையின் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் தினசரி தொற்று நோயாளர்கள் 3,500 வரை உயருமானால் சுகாதார சேவைகள் சீர்குலைய ஆரம்பிக்கும். இதனால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்படும் எனவும் உபுல் ரோஹன எச்சரித்தார். தொற்று நோய் அதிகரித்து வருகின்றபோதும் இலங்கையில் கொவிட் 19 தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள்தொகையில் 92 வீதத்துக்கும் அதிகமானோர் குறைந்தபட்சம் ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

எனினும், அரசும் பொதுமக்களும் முழுமையாக தடுப்பூசியை நம்பி இருக்கக் கூடாது என உபுல் ரோஹண அறிவுறுத்தினார்.

இரண்டு தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்டவர்களை மட்டுமே தொற்று நோயில் இருந்து பாதுகாப்பை பெற முடியும். ஆனால் நாட்டில் பெரும்பாலானவர்கள் ஒரு தடுப்பூசியை மட்டுமே பெற்றுள்ளனர்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 23 வீதம் பேர் மட்டுமே இதுவரை இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்கள் கூட தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்படலாம். அவர்களிடம் குறைந்த அறிகுறிகள் தென்படும் என்பதால் இத்தகையோர் நோய்க் காவிகளாக பலருக்கு தொற்று நோயைப் பரப்பலாம் எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார்.

---

# தொழிற்சங்க போராட்டத்தில் ஒன்றிணையுமாறு கிளிநொச்சி அதிபர், ஆசிரியர் சங்கமும் அழைப்பு

கிளிநொச்சி, ஓக. 08

தற்போது நாட்டில் இடம்பெறும் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் நோக்கில் கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம், மற்றும் இலங்கை ஆசிரியர் சங்க கிளிநொச்சி கிளை என்பனவும் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்ட ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர்கள் இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத் தலைவர் சவரி பூலோகராஜா தெரிவிக்கையில்-

வடபகுதியைச் சேர்ந்த நாம் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து போராட்டத்துக்கு வலுச்சேர்க்க எண்ணியுள்ளோம். கொரோனா காரணமாக பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் மாணவர்களின் கல்வி இழக்கக் கூடாது என கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு சூம் மற்றும் செயலட்டை ஊடாக கற்றலை மேற்கொண்டிருந்தோம் சம்பள முரண்பாடு தீர்க்கும் வரை அனைவரும் குறித்த கற்றல் செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ளோம். பெற்றோர்கள் எங்களோடு முரண்படாதீர்கள். எமது போராட்டத்துக்கு தீர்வு பெற ஒத்துழைப்பு வழங்குங்கள். மாணவர்கள் இழந்த கல்வியை மீள வழங்குவோம். எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் எமக்கான சாதகமான முடிவு கிடைக்காதுவிடின் அடுத்த வாரமளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். அதற்கு இன,மத, பேதமின்றி அனைவரும் ஒன்றிணையவேண்டும்-என்றார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி கிளை செயலாளர் திருநாவுக்கரசு சிவரூபன் கருத்து தெரிவிக்கையில்-

நீண்டகாலமாக அதிபர்,ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர் சங்கம் முன்னெடுக்கும் போராட்டத்தை காலத்துக்கு காலம் வரும் அரசுகளும் தீர்க்க தவறுகின்றன. கல்வியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் சுபோதினி ஆணைக்குழுவை அமைத்து குறித்த ஆணைக்குழு ஊடாக அறிக்கை பெற்றும் அந்த அறிக்கையை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. அதனை நடைமுறைப்படுத்தவே போராடுகின்றோம். 1997ஆம் ஆண்டு போன்று ஏனைய சேவையைப் போல் சமனான சம்பளத்தையே எமக்கும் வழங்குமாறு கேட்கின்றோம். நாடளாவிய ரீதியில் பேரெழுச்சி கொள்வது போல் கிளிநொச்சி மாவட்டத்திலும் போராட்டம் பேரெழுச்சி பெறும். மாவட்டத்தின் அதிபர், ஆசிரியர் சங்கங்கள் 100வீதம் கற்பித்தலிருந்து விலகுவதாக உறுதியளித்துள்ளனர்.

ஒவ்வொரு அமைச்சரவை முடிவுகளிலும் எதிர்பார்க்கின்றோம். எமது பிரச்னைக்கான சாதகமான பதில் கிடைக்குமா என்று மூன்று வாரங்கள் கடந்தும் இதுவரை சாதகமான பதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

திங்கட்கிழமையும் அமைச்சரவை கூடுகின்றது. சாதகமான பதில் கிடைக்காதுவிட்டால் அடுத்த வாரமளவில் கிளிநொச்சி கவனயீர்ப்பு போராட்டம் எம்மால் மேற்கொள்ளப்படும்-என்றார்.

---

# பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கொரோனாவால் தொடர்ந்து பாதிப்பு

மன்னார், ஓக. 08

கொரோனா தொற்று மற்றும் முடக்க நிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் மீள முடியாத கடன் சுமையில் தவிப்பதாகவும் மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள் அமைப்பினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் தலைமையில் மாவட்ட பெண் செயற்பாட்டாளர் மேரி பிரியங்கா ஒழுங்கமைப்பில் நேற்று சனிக்கிழமை காலை மன்னாரில் இடம்பெற்ற கூட்டத்திலே வளர்பிறை பெண்கள் அமைப்பின் தலைவி கே.நீற்றா மேற்படி விடயத்தை சுட்டிகாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா காரணமாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் மீனவப் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அதே நேரம் தங்களின் சுய தொழில் உற்பத்தி பொருட்களையோ மீன்களையோ சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. சந்தைப் படுத்தினாலும் உரிய விலை கிடைப்பதில்லை.

இது ஒரு புறம் இருக்க நுண்நிதி நிறுவனங்களின் கடன்களில் சிக்கியும் அவற்றை கட்ட முடியாத நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் செய்வதறியாத நிலையில் உள்ளன.

அதே நேரம் அரசாங்கத்தின் வீட்டுத்திட்ட நிதியும் பல வருடங்கள் கடந்தும் வழங்கப் படாமையினால் அதன் காரணமாக ஏற்பட்ட கடன் சுமையையும் சமாளிக்க முடியாத நிலையில் தற்கொலை செய்ய வேண்டிய நிலையே காணப்படுகிறது.

எனவே அரசாங்கம் விரைவில் மக்களுக்கான நிவாரண உதவிகளையோ அல்லது வீட்டு திட்டங்களுக்கான மிகுதி பணத்தையோ அல்லது மாற்றுத்தொழில் வாய்ப்புக்களையோ ஏற்படுத்தி வழங்க வேண்டும்-என்றார்.

---

# மேலும் 2,487 பேர் குணமடைவு

இலங்கையில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 2,487 பேர் பூரண குணமடைந்துள்ளனர். இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரத்து 794 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 24 ஆயிரத்து 223 ஆக பதிவாகியுள்ளது.

அதில் 28,510 பேர் தொடர்ந் தும் சிகிச்சைப்பெற்று வருகின்ற அதேநேரம், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரி ழந்தோரின் எண்ணிக்கை 4,919 ஆக உயர்ந்துள்ளது.

---

# காட்டு யானைகள் அட்டகாசத்தால் மக்கள் பாதிப்பு

வவுனியா, ஓக. 08

வவுனியா - சின்னத்தம்பனை கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தினால், கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை, சின்னத்தம்பனை கிராமத்திலுள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்த யானைகள், வாழைகள், தென்னம் பிள்ளைகள், மரவெள்ளி, பலா மரம் போன்ற பயன்தரும் மரங்களை முறித்து சேதப்படுத்தியுள்ளன.

இவ்வாறு கிராமத்தை யானைகள் ஆக்கிரமித்து வருகின்றமையினால், தமது சொந்த கிராமத்தில் இருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை உருவாகியுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆகவே தாம் நிரந்தரமாக விவசாயம் செய்து நிம்மதியாக வாழ்வதற்கு தமது கிராமத்தை சுற்றி யானைகளுக்கான மின் சாரவேலியை அமைத்து தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆசிரியர்கள் மீது கை வைத்ததில்லை இனிக் கை வைக்கப்போவதுமில்லை

## அமைச்சர் சரத் வீரசேகர கூறுகிறார்

கொழும்பு, ஓக. 08

**ஆசிரியர்கள் மீது கை வைத்ததில்லை என்றும் இனி மேலும் கைவைக்கப்போவதில்லை என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

**பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குடிவரவு-குடியகல்வு சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் இப்போது பல்வேறு தரப்பினர் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். இவ்வாறான ஆர்ப்பட்டங்களால் பொலிஸ் அதிகாரியொருவர் விரல்கள் இரண்டை இழந்துள்ளார்.

ஆனால் எதிர்க்கட்சியினர் இதுவரை குறித்த விடயம் தொடர்பாக கண்டனத்தையோ அல்லது கவலையையோ வெளியிடவில்லை.

நல்லாட்சி காலத்தில் நீர்த்தாரைப் பிரயோகம், கண்ணீர் புகைத்தாக்குதல், தடியடி பிரயோகம் என்பன நடத்தப்பட்டது.

ஆனால் நாங்கள் ஒரு ஆசிரியர் மீதும் கை வைத்ததில்லை, கை வைக்கப் போவதும் இல்லை. ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய எங்களை தாக்கினாலும் பொறுமையாக இருக்குமாறே பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது - என்றார்.



# பருத்தித்துறை பகுதியில் இரு ஆலயங்களுக்கு சீல்

யாழ்ப்பாணம், ஓக. 08

பருத்தித்துறையிலுள்ள சுப்பர்மடம் முனியப்பர் ஆலயம், சிவன் ஆலயம் ஆகியன தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வழிபாடுகள் அனைத்தும் 14 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டு, மூடப்பட்டுள்ளன.

நேற்று பருத்தித்துறை முனியப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற இரதோற்சவத்தில் கலந்துகொண்ட அதிகளவான பக்தர்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதமை தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு ஒளிப்படத்துடன் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய அப்பகுதிக்குச் சென்று விசாரணையை மேற்கொண்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார், சுகாதார நடைமுறைகளை பேண தவறியமைக்காக, ஆலயத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி வரை வழிபாடுகளை நிறுத்தி மூடுவதற்கு அறிவித்தல் ஒட்டப்பட்டது.

இதேவேளை பருத்தித்துறை சிவன் ஆலயத்திலும் சுகாதார நடைமுறைகளை மீறி,வெளி வீதியில் திருவிழாவை நடத்தியமைக்காக அந்த ஆலயத்தின் வழிபாடுகளையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை இடைநிறுத்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஆலய நிர்வாகிகளும் வீடுகளிலேயே சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் 24மணி நேரத்தில் 256 கொரோனா தொற்றாளர்கள்!

மட்டக்களப்பு, ஓக. 08

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று காலை வரை கடந்த 24 மணி நேரத்தில் 256 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 05 மரணங்களும் ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் முத்துலிங்கம் அச்சுதன் தெரிவித்தார்.

மூன்றாவது கொவிட் அலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 9043 பேர் கொரனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மூன்றாவது அலையின் தாக்கத்தினால் 124பேர் மரணமடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் குணம் குறியற்றவர்களை வீட்டில் வைத்து சிகிச்சையளிக்கும் வகையிலான செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் முழுமையான பங்களிப்பை வழங்கும்போதே அதனை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

டெல்டா தாக்கம் இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஏற்படவில்லையெனவும் பொதுமக்கள் தமது சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலமே இவ்வாறான தொற்றுக்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பாலூட்டும் தாய்மார்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் ஆபத்து இல்லை

## உலக சுகாதார ஸ்தாபன நிபுணர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 08

பாலூட்டும் தாய்மார்கள் தங்கள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் எந்த ஆபத்தும் இருக்காது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர் தெரிவித்துள்ளார்.

அதன்படி குழந்தையைப் பெற்றெடுத்தவர்களும் பாலூட்டும் பெண்களும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என நிபுணர் சௌமியா சுவாமிநாதன் தெரிவித்தார்.

தற்போது பயன்படுத்தப்படும் அனைத்து தடுப்பூசிகளிலும் உயிருள்ள வைரஸ்கள் இல்லை என்பதனால் அவை தாய்ப்பால் மூலம் பரவுவதற்கான ஆபத்தும் இல்லை என அவர் கூறினார்.

உண்மையில், தாய்மார்களின் நோய் எதிர்ப்பு சக்தியே தாய்ப்பால் மூலம் குழந்தைகளுக்குச் செல்லும் என்றும் சௌமியா சுவாமிநாதன் குறிப்பிட்டார்.

(அ)

# பால்மா விலை உயராது

கொழும்பு, ஓக. 08

பால்மா விலையை அதிகரிப்பதற்கான எந்தவொரு தீர்மானமும் இதுவரை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கவில்லை என கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டீ. பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் தற்போது பால்மாவுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் வாரத்தில் இலங்கையில் மிகப்பெரிய பால்மா தட்டுப்பாடு நிலவலாம் என எதிர்பார்க்கப்படுவதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் தற்போதும் பால்மா தட்டுப்பாடு தலைதூக்கியுள்ள நிலையில், வெளிநாடுகளிலிருந்து பால்மா இறக்குமதியை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# மீட்கப்பட்ட இராணுவ எச்சங்கள் 25 வருடங்களுக்கு முற்பட்டவை

## கிளிநொச்சியில் அகழ்வு நிறுத்தம்

கிளிநொச்சி, ஓக. 08

கிளிநொச்சியில் இராணுவச் சீடையுடன் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் அகழ்வுப் பணி நிறைவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி விளாவோடை வயல் பகுதியில் இருந்து இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன.

இந்த நிலையில் குறித்த பகுதியை சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த வயல் காணியை சீரமைத்த காணி உரிமையாளர் எச்சங்கள் அவதானிக்கப்பட்டதை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அப்பகுதியில் பாதுகாப்பு அணைக்கட்டு காணப்படும் நிலையில் அந்த அணைக் கட்டை அகற்றியபோதே குறித்த எச்சங்கள் அடையாளம் காணப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பகுதியை நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டார்.

அதன் அடிப்படையில் மேலும் எச்சங்கள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், அகழ்வுப் பணிகளை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டார்.

இதன் அகழ்வுப் பணிகள் 2 நாள்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது ஒரு கைக்குண்டு, தொடர்பாடல் சாதனம், இரண்டு தலைக்கவசங்கள், ரவைக்கூடுகள், உடைகள் மற்றும் இராணுவத்தினர் பயன்படுத்தும் உணவு பொதிகள் உள்ளிட்ட பொருட்களின் எச்சங்களுடன், மனித எச்சங்களும் மீட்கப்பட்டன.

இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது இவை மீட்கப்பட்டுள்ள நிலையில் பணி நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

மீட்கப்பட்டவை அனைத்தும் 25 ஆண்டுகள் பழமையானவையாக இருக்கலாம் எனவும், மனித எச்சங்களுடன் மீட்கப்பட்ட தடயப் பொருட்கள் அனைத்திலும் 97ஆம் ஆண்டுக்கு முற்பட்ட திகதியிடப்பட்ட பொருட்களாகவே காணப்பட்டுள்ள நிலையில் இரண்டும் ஒப்பீட்டளவில் ஒரே காலப்பகுதியை சேர்ந்தவையாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

1996ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரை கிளிநொச்சியில் இராணுவம் நிலைகொண்டிருந்தது.

இந்த நிலையில் மீட்கப்பட்ட கைக்குண்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் அனுமதியுடன் செயலிழக்க செய்யப்படவுள்ளதாகவும், அது தற்போது பாதுகாப்பாக விசேட அதிரடிப்படையினரிடம் பொலிஸாரால் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அங்கு மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் தடயப் பொருட்கள் அனைத்தும் நாளை திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.




# சீனா எதிர் அமெரிக்கா!

## வானில் ஆதிக்கம் செலுத்துவது யார்? (ஆறாவது தலைமுறை விமானங்களின் போர்)

விமானப்படைக்கு ஆறாவது தலைமுறை "ஸ்டெல்த்" போர் விமானத்தை தயாரிப்பது தொடர்பாக அமெரிக்கா மற்றும் சீனா இடையே ஒரு புதிய ஆயுதப் போட்டி தொடங்கியிருக்கிறதா?

கிடைக்கும் சமிக்ஞைகளைப் பார்த்தால் இந்த கேள்விக்கான பதில் "ஆம்" என்றே தோன்றுகிறது.

"ஆறாவது தலைமுறை" போர் விமானங்கள் மூலம் "அடுத்த தலைமுறை வான்வெளி ஆதிக்கம்" (NGAD) என்ற திட்டம், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் பயன்பாட்டுக்கு வரும் என்று அமெரிக்க விமானப் படை 2021 ஜூன் மாதம் அறிவித்தது.

புதிய, அதிநவீன போர் விமானங்கள், எவ் -22 ராப்டரின் இடத்தில் கொண்டுவரப்படும் என்றும் அவை ஒரே நேரத்தில் பல பணிகளை செய்யும் திறன் பெற்றவை என்றும் அமெரிக்க விமானப்படையின் தலைமை அதிகாரி ஜெனரல் சார்ள்ஸ் குயின்ரன் பிரவுண் ஜூனியர், அமெரிக்க பாராளுமன்ற இராணுவ குழுவிடம் தெரிவித்தார்.

இந்த போர் விமானத்தின் முக்கிய நோக்கம் வான் வெளியில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதாக இருக்கும் என்று 2022 நிதியாண்டுக்கான பட்ஜெட் யோசனை தொடர்பாக பேசிய விமானப்படைத் தலைவர் குறிப்பிட்டார். ஆனால், அதே நேரத்தில், இந்தப் போர் விமானங்கள் தரை இலக்குகளை குறிவைக்கும் திறன் கொண்டவை என்றும் அவர் தெரிவித்தார்.

"ஆறாவது தலைமுறை போர் விமானம்" வானத்திலிருந்து தரை இலக்குகளை தாக்கும் திறனைக் கொண்டுள்ளது. தனது பாதுகாப்பை முதன்மையாக கொண்டுள்ள இது, நமது விமானப்படை தளபதிகளுக்கும் கூட்டுப் படைகளுக்கும் விருப்பத்தேர்வுகளை வழங்குவதாகவும் இருக்கும்," என்றார் அவர்.

"என்.ஜி.ஏ.டி. போர் விமானம், எவ் -22 இன் செயல்பாட்டு வரம்பையும் விரிவுபடுத்தியுள்ளது. இது அதிக அளவு ஆயுதங்கள் அல்லது வெடிமருந்துகளை எடுத்துச் செல்லும் திறனைக் கொண்டுள்ளது, இது இந்தோ - பசுபிக் (இந்தியப் பெருங்கடல், ஆசியா முதல் அவுஸ்திரேலியா மற்றும் கிழக்கு அமெரிக்க) பிராந்தியம் முழுவதும் பயணித்து குறிவைக்கும் திறனைக் கொண்டுள்ளது,"என்று பிரவுண் மேலும் கூறினார்.

என்.ஜி.ஏ.டிகள் எப்பொழுதும் "பமிலி சிஸ்டம்" என்றே அழைக்கப்படுகின்றன. எதிரிகளின் விமானி இல்லாத - விமான தாக்குதல் திறன்களை அழிக்க, மின்னணு தாக்குதல் போன்ற பணிகளைச் செய்ய, மற்றும் கூடுதல் ஆயுதங்களைக் கொண்ட ஓர் இயந்திரமாகவும் இவற்றைப் பயன்படுத்தமுடியும். ஆனால், அதன் அடிப்படை அமைப்பு விமானம்தான் என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீன விமானப் படை, தரையிலிருந்து தரை இலக்கை தாக்கவல்ல ஏவுகணைப் படை ஆகியவற்றின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக இந்த ஆயுத அமைப்பை அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. நவீன சீன விமானங்கள், நீண்ட தூரம் சென்று தாக்கவல்ல ஏவுகணைகளின் அடுத்த தலைமுறை சவால் அருகாமையில் இருக்கிறது என்று செயல் திட்டம், ஒருங்கிணைப்பு மற்றும் தேவைகளுக்கான தலைமை அதிகாரி லெப். ஜெனரல் எஸ். கிளின்ரன் ஹை நோட், கூறினார்.

நீண்ட தூர போர் விமானங்களை அறிமுகப்படுத்துவது "வெளிப்படைத்தன்மை" பிரசாரத்தின் ஒரு பகுதியாகும். சீனாவினால் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து காங்கிரஸை எச்சரிப்பது, இதை எதிர்த்து சமாளிக்க ஆற்றல்மிக்க ஒருமுறைமையை கொண்டுவருவதும் இதன் நோக்கமாகும். "ஜே -20 போன்ற அதிநவீன ஏவுகணைகள் அமெரிக்க விமானப்படைக்கு அச்சுறுத்தலாக மாறும் நேரம் நிச்சயமாக நெருங்குகிறது," என்று ஹை நோட் குறிப்பிட்டார்.

ஜே -20 என்பது சீனாவின் முதல் ஸ்டெல்த் (ரேடார் மற்றும் மேம்பட்ட உபகரணங்கள் மூலம் கண்டுபிடிக்க முடியாதது) போர் விமானமாகும். தற்போது இது பயன்பாட்டில் உள்ளது. "இது (சீன விமானம்) ஒரு அச்சுறுத்தலாக உள்ளது. நாம் அதை எதிர்த்து சமாளித்தாக வேண்டும்.", என்றார் ஹை நோட்.

சீன விமானப்படைக்கும் அமெரிக்க விமானப் படைக்கும் இடையே பரஸ்பர குற்றம்சாட்டல் ஏற்கனவே தொடங்கிவிட்டது. கடந்த ஆண்டு சீனா வின் அரச ஆங்கிலப் பத்திரிகையான குளோபல் ரைம்ஸில் வெளியிடப்பட்ட கட்டுரையில், "ஆறாவது தலைமுறை போர் விமானங்களுக்கான உலகளாவிய பந்தயத்தில் சீனா பின்தங்கியிருக்காது, அடுத்த தலைமுறை போர் விமானங்களை 2035இற்குள் சீனா உருவாக்கும்.", என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஆறாவது தலைமுறை போர் விமானங்கள் 2035இல் அறிமுகப்படுத்தப்படும் என்று முன்னணி சீன போர் விமான நிபுணர் வாங் ஹெஃபெங் கூறினார்.

வாங் ஹெஃபெங், செங்டு விமான ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு நிறுவனத்தின் தலைமை வடிவமைப்பாளர் ஆவார். இவர் ஜே-20 மற்றும் ஜே-10 போர் விமானங்களின் கட்டுமானத்திலும் பங்கேற்றுள்ளார். ஜோ-சியானில் இருக்கும் தேசிய பாதுகாப்புத் கழகம், தொழில்-அறிவியல் தொழில்நுட்ப அறிக்கையை ஜனவரி மாதம் வெளியிட்டது.

ஆறாவது தலைமுறை போர் விமானத்தில் புதிய தொழில்நுட்பம் சேர்க்கப்பட்டுள்ளது என்று இந்த அறிக்கை கூறுகிறது. இதில் கட்டளை ட்ரோன்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் ஏரோடைனமிக் (காற்று எதிர்ப்பைக் குறைப்பதன் மூலம் வேக மாக பறக்கும் திறன்) வடிவமைப்பு மூலம் உயர்தர ஸ்டெல்த் திறன் உட்பட.

பல அம்சங்கள் சேர்க்கப்பட் டுள்ளன என்று இந்த அறிக்கை மேலும் கூறுகிறது. சீனா இந்த அம்சங்களில் சிலவற்றை தேர்வுசெய்து, தேவைகளுக்கு ஏற்ப அவற்றை விமானத்தில் இணைக்கும்.

### பாகிஸ்தான் நிபுணர்கள் இதைப் பற்றி என்ன சொல் கிறார்கள்?

இஸ்லாமாபாதில் வசிக்கும் பாதுகாப்பு ஆய்வாளர் ஷாஹித் ராசா,"சீனா ஐந்தாவது தலைமுறை ஜே -20 தொடரை சமீபத்தில் உருவாக்கியதைத் தொடர்ந்து அமெரிக்க விமானப்படை, குறிப்பிட்ட நோக்கத்துடனும் குறிக்கோளுடனும் இந்த விமானத்தை உருவாக்குகிறது,"என்று தெரிவித்துள்ளார்கள்.

இந்த விமானத்தில் அமெரிக்கா, ஆறாவது தலைமுறை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் நோக்கம் , சீனா போன்ற தனது பாரம்பரிய போட்டியாளரிடமிருந்து வான் ஆதிக்கத்தை கைப்பற்றுவதாகும் என்று அவர் மேலும் கூறுகிறார்.

"இந்த விமானங்கள் பெரும்பாலும் அமெரிக்காவுக்குள் நிறுத்தப்படும், ஆனால் பதற்றம் அதிகரிக்கும் போது, சீனாவுடனான அதிகார சமநிலையை சீர்குலைக்க, ஆறாவது தலைமுறை போர் விமானங்களை இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் நிலைநிறுத்த முடியும். இதன் விளைவாக, சீனா ஆறாவது தலைமுறை தளத்தை தயாரிக்கத் தொடங்கக்கூடும்,"என்று ஷாஹித் ராசா குறிப்பிட்டார்.

இந்த புதிய தொழில்நுட்பம், தெற்காசிய பிராந்தியத்தையோ, பாகிஸ்தானையோ அதிகம் பாதிக்காது என்று அவர் கூறினார். "அமெரிக்க அரசு, தனது நெருங்கிய நட்பு நாடுகளுக்கு கு 22 ராப்டர் விமானங்கள் ஏற்றுமதியை அனுமதிக்காதது போலவே, தொழில்நுட்ப கவலைகள் காரணமாக இந்தியா உட்பட அதன் கூட்டாளி நாடுகளுடன் 6 வது தலைமுறை தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்ளாது என்றே நான் நினைக்கிறேன்," என்றார் ஷாஹித் ராசா. "இந்த விமானத்துக்கும் பாகிஸ்தானுக்கும் எந்த சிறப்பு உறவும் இல்லை. எதிர்காலத்தில் விமானத் திறனுக்கு ஒரு புதிய முன்னுதாரணமாக அது இருக்கும்,"என்று அவர் கூறினார்

அமெரிக்க விமானப்படையின் அதிநவீன முன்னணி விமானம் என்பதால், இது நேட்டோ நாடுகளுக்கு (இந்தியாவுக்கு அல்ல) எளிதாக ஏற்றுமதி செய்யப்பட வாய்ப்புள்ளது. எனவே, இப்பகுதியில் ஒரு பெரிய புவிசார் அரசியல் மாற்றம் ஏற்படாதவரை, தெற்காசியாவுக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இருக்காது என்று தெரிகிறது.

அமெரிக்க விமானப்படையின் தலைவர்கள் 2022 நிதியாண்டுக்கான பட்ஜெட் முன்மொழிவை சமர்ப்பிக்கும்போது இந்த போர் விமானத்தின் முக்கிய பங்கு , வான்வெளி ஆதிக்கம் அல்லது இறையாண்மையை நிலைநிறுத்துவதாகும் என்று கூறினர். ஆனால், அது தரை இலக்குகளை தாக்கும் திறனையும் கொண்டிருக்கும் .

அமெரிக்க விமானப்படை தனது போர் விமானப்பிரிவை, எவ் -35, எவ்-15 ஈ.எக்ஸ்., எவ்-16 மற்றும் என்.ஜி.ஏ.டி. உட்பட நான்கு வகையான விமானங்களுடன் மட்டுப்படுத்த திட்டமிட் டுள்ளதாக பிரவுண் கூறினார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் கோரிக்கைகளை வெளியிட்டது. என்.ஜி.ஏ.டி.க்கு தேவையான நிதி அதில் கோரப்பட்டுள்ளது.

என்.ஜி.ஏ.டி.திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல அமெரிக்க விமானப்படை, 150 கோடி அமெரிக்க டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் 28 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கோருகிறது. இது முந்தைய ஆண்டைவிட சுமார் 62. 3 கோடி டொலர்கள் அதிகமாகும்.

தலைமைத் தளபதி ஜெனரல் சாரள்ஸ் குயின்ரன் பிரவுண் ஜூனியர் "நாம் மாற்றத்தின் ஒரு கட்டத்தில் இருக்கிறோம்." என்றார். "விமானப்படை தனது தற்போதைய பலத்தை ஓரளவு குறைத்து (சில விமானங்களை நீக்கி) அதன் மூலம் சேமிக்க முடியும் என்றும் இதைக்கொண்டு புதிய விமானங்களை உருவாக்கமுடியும். அதாவது சீனா போன்ற ஒரு முக்கிய போட்டியாளரை தோற்கடித்து மிரட்டும் திறன் கொண்ட விமானங்கள்," என்று அவர் தெரிவித்தார். இன்று நாம் இந்த நடவடிக்கையை எடுக்கத் தவறினால், எதிர்காலத்தில் வான் யுத்தத்தில் சீனா அமெரிக்காவை தோற்கடிக்க வாய்ப்புள்ளது என்று அவர் எச்சரித்தார்.

அடுத்த தலைமுறை விமான மேலாதிக்க அமைப்புகள் (புதிய தலைமுறை அதிநவீன போர் விமானங்கள்) விமானப் படையின் போர் விமானங்களில் "வைல்ட் கார்ட்" (எதிர்பாராமல் அல்லது திடீரென்று) முறையில் சேர்க்கப்படும். இதற்கென பட்ஜெட் 2022 இல், 150 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் கோரப்பட்டுள்ளது. ஏனென்றால், இந்த திட்டத்தின் பெரும்பகுதி இரகசியமானது. இருப்பினும் சில விவரங்கள் வெளிவந்துள்ளன.

முதல் என்.ஜி.ஏ.டி. 2020இல் பறக்க விடப்பட்டது என்று முன்னாள் விமானப்படை அதிகாரியான வில் ரூபர் கடந்த செப்ரெம்பரில் கூறினார். மிக அதிக உயரத்தில் பறக்கும் சாதனை அப்போது படைக்கப்பட்டது, இதைக்காட்டிலும் அதிக உயரத்தில் பறக்கும் திறன் தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது.

என்.ஜி.ஏ.டி., தரை இலக்கு மீது தாக்குதல் நடத்துவது மட்டுமல்லாமல், வானில் உள்ள இலக்குகளையும் தாக்கும் திறன் கொண்ட பலநோக்கு விமானமாக இருக்கும் என்று தான் எதிர்பார்த்ததாக பிரவுண் கூறினார். "இந்த விமானத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய தரை இலக்கை தாக்கும் திறன் தேவையாக இருக்கும்," என்று அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய வடிவமைப்புகளை விரைவாக உருவாக்கி, "டிஜிற்றல் த்ரெட்" (நவீன தகவல் தொடர்பு அமைப்பு) மூலம், தளத்தில் தற்போதுள்ள விமானங்களை, அதாவது 50 முதல் 100 வரையிலான வரையறுக்கப்பட்ட அளவுகளில் அவற்றை பயன்படுத்துவது என்.ஜி.ஏ.டியின் நோக்கம் என்றும் ரூபர் கூறினார்.

தொழில்நுட்பத்தை நவீன மற்றும் புதுப்பித்த நிலையில் வைத்திருக்க ஏதுவாக, புதிய போட்டி வடிவமைப்பு (விமானம்) ஐந்து முதல் பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் விமானப் படையில் இருக்கும். பழைய மொடல்கள் நீக்கப்படும்.

என்.ஜி.ஏ.டியில் இரண்டு மாதிரிகள் அதாவது இரு வகை விமானங்கள் இருக்கவேண்டும் என்று அமெரிக்க விமானப்படை உயர் அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர்.

அதாவது ஒன்று ஐரோப்பிய பகுதிக்கு சென்று தாக்கவல்ல, குறைந்த தூரம் பயணம் செய்யக்கூடியது. இரண்டாவது பசுபிக் பகுதியை அடையக்கூடிய நீண்ட வரம்பைக் கொண்டது. எனினும் என்.ஜி.டி.ஏ. விமானங்கள் பறந்து தாக்குவதற்கு 10 ஆண்டுகள் ஆகலாம்...!

**நன்றி - பி.பி.சி.**

ஈழநாடு



# வட்டுக்கோட்டைத் தீர்மானம் 02

# ஈழத் தமிழர்களுக்கா? இந்திய நலன்களுக்கா?

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்


**1976**ஆம் ஆண்டு தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனம் என்று கருதப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானம் ஈழத்தமிழரின் அரசியல் இருப்பில் நிரந்தரமான வலிமையை ஏற்படுத்தியிருந்தது. ஈழத்தமிழர் சிறுபான்மையினர் என்றும் வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் என்றும் கருதப்பட்ட நிலையை மாற்றி ஈழத் தமிழர் ஒரு தேசிய இனமாக அடையாளப் படுத்திய தந்தை செல்வாவும் அவரின் தீர்மானமும் கடந்த 45 வருடங்களாக நிலையான வடிவத்தை ஏற்படுத்தியிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின் பிரகாரமும் மார்க்சிச சிந்தனையின் பிரதிபலிப்பாகவும் தேசிய இனங்களின் பிணக்குகளுக்கு தீர்வாகவும் சுயநிர்ணயம் என்ற கோட்பாடு உதயமாகியது.

இத்தகைய சுயநிர்ணயத்தை அடிப்படையாக கொண்டே வட்டுக்கோட்டை தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அத்தகைய தீர்மானத்தை இதுவரை எத்தகைய தரப்பும் கேள்வியின்றி பின்பற்ற முயன்றது. இக்கட்டுரை வட்டுக்கோட்டை தீர்மானம் இரண்டு பற்றிய உண்மை தன்மையையும் அதன் பின்னாலுள்ள அரசியலையும் தேட முயலுகிறது.

*01. 08. 2021*அன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டு கற்கை துறையின் (International Relations) பணியாற்றிய பேராசிரியர் ராமு மணிவண்ணனின் ஒருங்கிணைப்பில் உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் தமிழகம் - ஈழ தமிழ் அரசியல் தலைமைகள் இணையவழி உரையாடலொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த உரையாடலின் கருப்பொருள் "ஈழத்தமிழர் புவிசார் அரசியலில் இந்திய அரசின் உடனடி தலையீடு காலத்தின் கட்டாயம்" என்பதாக அமைந்திருந்தது. இதில், உரையாடிய தமிழக - ஈழத்து அரசியல் தலைமைகள் ஆரோக்கியமான உரைகளும் ஈழத்தமிழர் வரலாற்றில் ஈழத்தமிழர் எதிர்கொண்ட துயரங்களையும் சிலாகித்த உரையாடியிருந்தனர். அந்த உரையாடலில் உரையாற்றிய அனைத்து தரப்புக்களும் முன்வைத்த பதிவுகளில் ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின் தலைவி அனந்தி சசிதரன் முன்வைத்த வாதங்கள் காத்திரமிக்கவையாக காணப்பட்டன. இந்த மாநாட்டில் மூன்று பிரதான விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டன. அவற்றினூடாகவே இந்த இணையவழி மாநாட்டின் இலக்கு வெளிப்படுகின்றது. அதனை முழுமையாக அவதானித்தல் அவசியமாகின்றது.

முதலாவது, ஈழத்தமிழரின் புவிசார் அரசியல் என்பது உரையாடலில் பிரதான அம்சமாக இருந்தது. ஈழத்தமிழரின் அரசியல் இருப்பு ஏதொவொரு வகையில் புவிசார் அரசியல் மையவாத கருத்தியலாக வளர்ச்சியடைந்துள்ளது. அத்தகைய புவிசார் அரசியல் சக்தியாக இந்தியாவே கருதப்பட்டது. இந்தியாவின் பாதுகாப்புக்குள்ளும் நலனுக்குள்ளும் அகப்பட்டுள்ள ஈழத்தமிழர் தமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் யாவுக்கும் தீர்வாக இந்தியாவை கருதினார்கள். 34 கி.மீ கடற்பரப்பால் பிரிக்கப்பட்டள்ள இலங்கைதீவும் தமிழகமும் இனவரைவியல் ரீதியாக ஒத்த வரலாற்றையும் பண்பாட்டையும் கொண்டுள்ளது. இதனால் சிங்கள மக்களும், சிங்கள அரசியல் தலைவர்களும் ஈழத் தமிழரை தமிழகத்தின் நட்பு சக்தி என்பதை விட இந்தியர்களின் நட்பு சக்தி என்ற கருத்து நிலையை கொண்டிருந்தனர். இதனால் ஏற்பட்ட முரண்பாடு இந்தியர்களின் இலங்கை தீவின் மீதான இராணுவ அரசியல் தலையீட்டுக்கும் வழிவகுத்திருந்தது. இதனை எதிர்கொள்ளும் விதத்திலேயே ஈழத்தமிழரின் அஹிம்சைப் போராட்டத்தையும் அதன் பின்னான ஆயுத போராட்டத்தையும் இந்தியர்கள் ஊக்குவித்தனர். 1978ஆம் ஆண்டு திறந்த பொருளாதார கொள்கையூடாக அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளின் புகழரணாக இலங்கை தீவையும் இந்து சமுத்திரத்தையும் மாற்றுவதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை இந்தியர்கள் முறியடிக்க ஈழத்தமிழரே அவர்களின் சுயநிர்ணயத்தை சுயமான வளர்ச்சிக்குள் வளர விடாது தீவிரப்படுத்தி வலிமையற்ற வளர்ச்சிக்கு வித்திட்டனர். இதனால் எழுந்ததே ஈழத்தமிழர்களின் ஆயுதப்போராட்டம். அத்தகைய ஆயுத போராட்டம் இந்தியர்களுடைய நலன்களுக்கும் இந்திய ஆட்சியாளர்களுடைய கட்டுப்பாட்டையும் மீறுகின்றபோது அதனை அழித்தொழிக்க இலங்கை ஆட்சியாளர்களோடு கூட்டிணைந்தது மட்டுமன்றி பனிப்போருக்கு பின்னான உலக மாற்றத்தை அடிப்படையாக கொண்டு அமெரிக்காவுடனும் கூட்டுச்சேர்ந்து ஆயுத போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.

இரண்டாவது, இந்திய அரசின் தடுத்து நிறுத்தவே இரண்டாவது வட்டுக்கோட்டை தீர்மானம் என்ற பெயரில் இந்தியாவை இலங்கையில் தலையீடு செய்ய அத்தகைய குழு கருதுகிறது. ஈழத் தமிழரின் அஹிம்சை போராட்டத்தை ஆயுதப்போராட்டமாக மாற்றி தீவிர தலையீட்டை சாத்தியப்படுத்திய இந்தியா மீளவும் தமது நலனுக்காக தலையீட்டை விரும்புகிறது. அதற்கானதொரு சூழலை கருத்தியல் ரீதியில் வளம்படுத்தவும் இத்தகைய மாநாடுகளை நடாத்துவதனூடாக தென்னிலங்கை ஆட்சியாளர்களை அழுத்தங்களுக்குள் உட்படுத்தலாம் என்றும் தவறான கணிப்பீடுகளை இந்தியா மேற்கொள்கிறது. இந்தியாவின் இத்தகைய நகர்வுகள் பலவீனமானவை என்பதோடு தலையீட்டுக்கான எத்தகைய



உடனடி தலையீடு என்பது எதற்கானது என்ற கேள்வி முதன்மையாக உள்ளது. ஈழத்தமிழரை முள்ளிவாய்க்காலில் அழித்து அடித்து நொறுக்கிய போது எவ்வித எதிர்வினையுமாற்றாத இந்திய அரசு எதற்காக இலங்கை மீது உடனடி தலையீடு செய்ய வேண்டுமென்பது ஈழத்தமிழரின் கேள்வியாக உள்ளது. அத்தகைய தலையீடு ஒன்றுக்கான அகச்சூழல் அல்லது புறச்சூழல் தற்போது ஏற்பட்டுள்ளதா? அதாவது வட்டுக்கோட்டை தீர்மானம் இரண்டு காரணகர்த்தாக்களின் நோக்குகையில் ஈழத்தமிழர்களில் எத்தகைய தரப்பு ஆக்கிரமிப்பினை மேற்கொள்கிறது. அத்தகைய ஆக்கிரமிப்பை தென்னிலங்கை மேற்கொள்கிறதா? அல்லது சீன தேசம் மேற்கொள்கிறதா? 1987களில் அமெரிக்கா தலையீடு செய்கின்றது என்பதற்காக இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை இந்தியா கைச்சாத்திட்டது. தற்போது சீனா இலங்கையில் தலையீடு அதிகரித்து செல்கின்றது என்றும் இந்தியாவின் தென்பகுதியை சீனா கண்காணிக்க ஆரம்பித்துள்ளது என்பதையும் கருத்திற்கொண்டு இந்தியாவினது தேசிய பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகியுள்ளது. இத்தகைய சூழலியே இந்தியாவின் தலையீடு இலங்கைக்கு அவசியமென்று இரண்டாவது வட்டுக்கோட்டை தீர்மானத்தின் காரணகர்த்தாக்கள் கருதுகிறார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சீனாவின் தலையீடு நீண்ட நெருக்கடியை இந்தியாவிற்கு ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது. இதனை சூழலும் இல்லை என்பது யதார்த்தமானதாகும்.

மூன்றாவது, காலத்தின் கட்டாயம் என்ற வாதம் என்பது வட்டுக்கோட்டை தீர்மானம் இரண்டு கர்த்தாக்களின் நிலைப்பாடாகும். அத்தகைய காலத்தின் கட்டாயம் என்பது சீனா சார்ந்தது அன்றி தென்னிலங்கை சார்ந்தது கிடையாது. தென்னிலங்கைக்கும் புதுடில்லிக்குமான நட்புறவு மிகப்பலமானதும் பிரிக்க முடியாததொன்றாகவும் வளர்ந்துள்ளது. குறிப்பாக வர்த்தகத்திலும், கடல்ரீதியிலான வர்த்தகத்தொடர்பிலும், கடல் ரீதியிலான பாதுகாப்பு ஒத்துழைப்பிலும் மற்றும் இராணுவ ஒத்துழைப்புக்களிலும் இரு நாடுகளும் மிக இறுக்கமான பிணைப்பினை கொண்டுள்ளது. ஏறக்குறைய நாற்பது வீதத்திற்கு மேற்பட்ட வர்த்தக ஏற்றுமதி இறக்குமதிகள் மும்பைக்கும் கொழும்புத்துறைமுகத்துக்குமிடையில் நிலவுகின்றது. அவ்வாறே கடற்பாதுகாப்பு ரீதியிலான ஒத்தழைப்புக்களும் உடன்படிக்கைகளும் இருநாடுகளுக்குமிடையில் அதிகமாக காணப்படுகிறது. ராஜ்ய சபாவின் இந்திய வெளிவிவகார பிரதி அமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்த கருத்தானது, "இலங்கை தமிழர்களுக்கு சமாதானம், நீதி, அமைதி மற்றும் கௌரவமான வாழ்க்கை வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதை இலங்கைக்கு நன்மையாக அமையும்" எனக்குறிப்பிட்ட விடயம் கடந்த இரண்டு ஆண்டுகால இந்தியா கூறி வரும் உச்சாடனமாகும். இதிலிருந்து விளங்கிக் கொள்ளக்கூடியதொரு விடயம் இந்தியா உறுதியாக இருக்கும் அவ்வறே உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கும். ஈழத்தமிழரின் காலம் என்பது ஈழத்தமிழரின் சுயநிர்ணயத்துக்கான தீர்மானங்களல்ல சுயநிர்ணயத்தை அடைவதற்கான வழிமுறையாகும். அத்தகைய வழிமுறையை எட்டமுயாத அதற்கான வழிவரைபடங்களை வரைய முடியாத தலைமைகள் சுயநிர்ணயத்தை ஒன்று, இரண்டு, மூன்று எனக்கூறுபோட்டு தமது அரசியல் இலாபங்களை அடைவதற்காக செயற்பட முடியுமேயன்றி வேற எதனையுமே வட்டுக்கோட்டை இரண்டு தீர்மானத்தால் ஏற்படுத்த முடியாது.


எனவே, ஈழத்தமிழர்களின் சுயநிர்ணயம் என்பது வட்டுக்கோட்டையில் முன்வைக்கப்பட்ட ஒரே ஒரு தீர்மானமே அடிப்படையானது. அதனை நினைவுகொள்வதும் அதனை நோக்கி அணிதிரள்வதும் அதற்கான தளத்தை சாத்தியப்படுத்தலாமேயன்றி அதன் வீரியத்தை குறைத்து பலவீனப்படுத்தி அணுகுமுறைகளுல் மாற்றங்களை செய்து அடைவதல்ல சுயநிர்ணயம். அதனைவிட அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்கான சுயபலத்தோடு அதன் மீதான அனைத்து அடக்குமுறைகளையும், ஆக்கிரமிப்புக்களையும் எதிர்கொள்ள முயல்வதே சுயநிர்ணயமாகும். மீளவும் இந்தியாவில் தங்கியிருத்தல், அமெரிக்காவில் தங்கியிருத்தல், உலகத்தில் தங்கியிருத்தல் என்ற மாயையை கைவிட்டு ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் தமது சுயத்தில் தங்கியிருப்பதனூடாகவே உண்மையான சுயநிர்ணயத்தை அடைய முடியும். கடந்த காலம் முழுவதும் இந்திய தேச நலனுக்காக ஈழத்தமிழர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். அத்தகைய நெருக்கடியே ஈழத்தமிழரின் தோல்விக்கான நெருக்கடியாக அமைந்தது. புதுடில்லி ஈழத் தமிழரை எப்படி கருதுகிறதோ அவ்வாறே தமிழகத்தையும் கருதுகிறது. ஈழத்தமிழரை முன்னிறுத்தி தமிழகம் புதுடில்லியை தனது அரசியல் அபிலாசைக்குள் கொண்டு வருவதற்கு பிரயோகம் செய்கிறது. ஈழத்தமிழருக்காக போராடும் தமிழக தலைமைகளும் தீக்குளித்த தமிழக உறவுகளும் சாதாரண பிரஜைகளே அன்றி அரசியல் தீர்மானமெடுக்கும் தலைமைகளோ, உயர் வர்க்கங்களோ, வர்த்தக கூட்டாளிகளோ இல்லை. புதுடில்லியுடன் உறவாடும் தமிழக அரசியல் தலைமைகளின் எண்ணங்களே ஈழத்தமிழ் அரசியல் என்பது புதுடில்லிக்கு சேவகம் செய்கின்ற அரசியலாகவே கருதுகின்றது. இந்தியாவின் உயர் இராஜதந்திரி ஒருவர் தமிழ் அரசுக்கட்சியின் தலைமைக்கு தெரிவித்த கருத்தொன்று இச்சந்தர்ப்பத்தில் நினைவு கொள்வது பொருத்தமானது. சீனாவின் இலங்கை மீதான தலையீடு பற்றிய வாதங்களை தமிழரசு கட்சியின் தலைமை முன்வைக்கும் போது அதனை இந்தியா பார்த்துக்கொள்ளும் என்றும் இந்தியாவிற்கு அதனை பார்த்துக்கொள்ள தெரியும் என்றும் கருத்துரைத்தார். எனவே வட்டுக்கோட்டை தீர்மானம் இரண்டு இந்தியாவின் நலனை மீண்டுமொரு முறை நிறைவேற்ற முயலுகின்றது என்பதை காட்டுகின்றது. புதுடில்லியின் அனுமதியின்றி சென்னை இந்த மகாநாட்டை நிகழ்த்தியிருக்க வாய்ப்பில்லை என்றும் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். **நன்றி - அருவி** ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

23. 


A,B,C என மூன்று தளங்களைக் கொண்ட குறித்த வீட்டில் C தளத்திலே உள்ள மூன்று அறைகளிலும் சம எண்ணிக்கையான மனிதர்கள் தங்கியுள்ளனர் C தளத்தில் உள்ளவர்களில் இருமடங்கினர் B தளத்தின் ஓர் அறையில் தங்கியுள்ளனர். B தளத்தில் உள்ளவர்களில் இரு மடங்கினர் A தளத்தில் தங்கியுள்ளனர் A தளத்தின் ஓர் அறையில் 24 பேர் தங்கியுள்ளனர் எனின் A,C ஆகிய இரு தளங்களிலும் தங்கியுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 99 2) 81 3) 90

24. ஓர் ஆசிரியர் தரம் - 05 மாணவர்களிடம் நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண்ணை எழுதுமாறு கூறினார். அந்த எண்ணின்

- இரண்டாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் மூன்று மடங்காகும்.
- முதலாம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தின் மூன்று மடங்காகும்.
- அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்?

1) 1331 2) 2963 3) 9632


25. 


குறித்த டிஜிற்றல் தராசின் தட்டில் உள்ள பழங்களில் அன்னாசிப்பழத்தின் நிறை இரு மாம்பழங்களின் நிறையின் இருமடங்காகும். இரண்டு அன்னாசிப்பழங்களிற்குச் சமமாக வைக்க தேவையான மாம்பழங்கள் எத்தனை?

1)  2)  3) 


26. ஆலயமொன்றின் வடக்குத் திசையில் மரம் உள்ளது மரத்திற்கு மேற்கே முன்பள்ளி உள்ளது. முன்பள்ளி பிரதேச சபைக்கு வடக்கே உள்ளது எனின்,
1) முன்பள்ளிக்கு கிழக்கே ஆலயமுள்ளது.
2) ஆலயத்திற்கு ஈசானமூலையில் முன்பள்ளி உள்ளது
3) முன்பள்ளிக்குத் தெற்கே பிரதேச சபை உள்ளது

27. ஒரு குறித்த நாளில் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் பற்றிய தகவல்கள் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளன. பாடசாலைக்கு முச்சக்கரவண்டியில் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்விரு வாகனங்களில் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கையின் அரைவாசிக்குச் சமனாகும்?





1) நடந்து, புகைவண்டி
2) புகைவண்டி, துவிச்சக்கரவண்டி
3) பேருந்து, துவிச்சக்கரவண்டி

28. பெட்டியொன்றில் 144 வளையல்கள் இருந்தன. அவற்றில் $\frac{4}{9}$ உடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மீதியாக இருந்த நல்ல வளையல்கள் 4 பெண் பிள்ளைகளுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.
i) பெட்டியிலிருந்து அகற்றப்பட்ட உடைந்த வளையல்களின் எண்ணிக்கை எவ்வளவு?
......................................................................
ii) இரு பெண் பிள்ளைகளுக்குக் கிடைத்த வளையல்களின் எண்ணிக்கை எவ்வளவு?
......................................................................

29. 


1) இந்த எண்சட்டத்தில் வகைக்குறிக்கப்படும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.
......................................................................
2) கோல் P இல் உள்ள மணிகளால் வகைக்குறிக்கப்படும் பெறுமானம் யாது?
......................................................................

30. ஜலஜா குறித்தவொரு இடத்திலிருந்து பயணத்தைத் தொடங்கி 50m வடக்கு நோக்கிச் சென்றாள். பின்பு உருவில் காட்டப்பட்டுள்ளவாறு இடது கைப்பக்கமாகத் திரும்பி 50m சென்றாள். இவ்வாறாகத் தொடர்ந்து பயணித்து E என்ற இடத்தில் நின்றாள்.




1) ஜலஜா ஆரம்ப இடத்திலிருந்து தற்போது எத்திசையில் இருக்கின்றாள்?
......................................................................
2) அவள் மீண்டும் ஆரம்ப இடத்தைச் சென்றடைவதற்கு குறித்த இடத்திலிருந்து எத்தனை தடவைகள் இடது கைப்பக்கமாகத் திரும்ப வேண்டும்?
......................................................................

- **31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.**

31. எதிர்காலத்தில் எனது நாட்டுக்குப் பயனுடைய ஒருவராக வருவேன். இவ் எண்ணம் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாம் படிமுறைக்கு உரியதாகும்.
1) இரண்டாம் 2) மூன்றாம் 3) நான்காம் 4) ஐந்தாம்

32. எல்லாக் காலங்களிலும் பூக்கும் தாவரங்களைக் கொண்ட தொகுதி,
1) மா, வாழை, தென்னை 2) வாழை, வேம்பு, மா
3) வாழை, தென்னை, பப்பாசி 4) ரம்புட்டான், வாழை, மா

33. காற்றினால் பரவும் வித்துக்களை மட்டும் கொண்ட விடைத் தொகுதி
1) எருக்கலை, முருங்கை, எண்ணை
2) எருக்கலை, பொன்னொச்சி, ஆடையொட்டி
3) சீதேவியார் செங்கழு நீர், துத்துரி, எருக்கலை
4) வேம்பு, முருங்கை, எண்ணை

34. நுளம்புகளை விரட்டும் முறைகளில் அடங்காதது,
1) உடலில் புல்லெண்ணெய் தேய்த்துக் கொள்ளல்
2) துளசிகளை எரித்துப் புகையூட்டல்
3) வேப்பம் விதைகளை எரித்துப் புகையூட்டல்
4) வீட்டின் யன்னல்கள், கதவுகளை மூடி விடுதல்

# பெருந்தோட்டத்துறையின் பலம் வாய்ந்த தொழிற்சங்கக் கூட்டணி விரைவில் உதயம்

## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 08

**பெருந்தோட்டத்துறைச் சார்ந்த நான்கு முக்கிய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து சம்மேளனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளன. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இவ்வாறு ஒரே அணியாகச் செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளன.**

இது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுசெயலாளர் வடிவேல் சுரேஷ், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ.இராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு இடையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கம் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் கலந்துகொண்டார்.

இதன்போது, பெருந்தோட்டத்துறை மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளின்போது, ஒரே தொழிற்சங்க சக்தியாக செயற்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கருத்து வெளியிடுகையில்,

“மீனவர்கள், விவசாயிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் வீதிக்கு வந்து போராடுகின்றனர். நாங்கள் இன்னமும் தேயிலை, இறப்பர் பெருந்தோட்டத் தொழிலாளர்களைத் தெருவுக்கு இறக்கவில்லை.

அப்படி இறங்கிப் போராடும் பாஷை தான் அரசுக்குப் புரியும் என்றால் அதன்படி போராட நாம் தயார்.

நாட்டின் நிலைமையையும், தொழிலாளர்களின் நிலைமையையும் மனதில் கொண்டு நாம் அரசுக்கு அவகாசம் வழங்குகிறோம்.

நாமே நேரடியாகக் கட்சி அங்கத்தவர்களுடன்தான் இப்போது போராடுகின்றோம். விரைவில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். இதை எங்கள் பலவீனமாக நினைக்க வேண்டாம். நியாயமான தீர்வு வராவிட்டால், தொழிலாளர்களைத் தெருவுக்கு இறக்கும் நிலைமை உருவாகும்.

நாட்டில் விலைவாசி பலமடங்கு உயர்ந்து விட்டது. சம்பளம் ஆயிரம் என்று எழுத்தில் எழுதிக் கொடுத்து விட்டார்கள். ஆனால், எத்தனை நாள் வேலை என தீர்மானிக்கப்பட வில்லை.

வர்த்தமானியில் ‘கால அடிப்படை சம்பளம்’ என கூறப்பட்டுள்ளது. அது என்ன ‘கால அடிப்படை’ என்பதைத் தேடிப்பாருங்கள்.

நாடாளுமன்றத்தில் தொழில் அமைச்சர் கொண்டு வந்த குறைந்தபட்ச சம்பளம் என்ற சட்டமூலத்தில், மாதத்துக்கு 25 நாள் வேலை என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதுதான் கால அடிப்படை. அப்படியானால், ஒருநாளைக்கு ஆயிரம் ரூபா என்றாலும், மாதம் 25 நாள் வேலை என்றாலும், ஒரு மாதத்திற்கு 25 ஆயிரம் ரூபா ஆகும்.

அரசின் கணக்கு எப்படியோ தெரியவில்லை. தோட்டத்தொழிலாளர்களைத் தோட்ட நிறுவனங்களுடன் பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு, அரசு கைகளைக் கழுவிக்கொள்ள முடியாது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைப்பது இல்லை என தனக்கு இதுவரை முறைப்பாடு கிடைக்கவில்லை எனவும் அமைச்சர் நிமல் சிறிபால சில்வா கூறுகின்றார்.

இது ஆச்சரியம்தான். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா முறையாகக் கிடைப்பது இல்லை. அது ‘நிறை’ மற்றும் ‘எத்தனை நாள் வேலை’ என்பவற்றால் தடையாகின்றது” - என்றார். (இ)

# ஹரின் எம்.பி. நேரடி விவாதத்தை சி.ஐ.டியுடன்தான் நடத்தவேண்டும்

## அமைச்சர் வீரசேகர பதிலடி

கொழும்பு, ஓக. 08

”உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் தமக்குத் தெரிந்த தகவல்களை வழங்குவதற்காக சி.ஐ.டியினர் அழைத்தால் ஹரின் பெர்னாண்டோ எம்.பி. வைத்தியசாலையில் சென்று படுத்துக்கொள்கின்றார். ஆனால், பாராளுமன்றத்தில் நேரடி விவாதத்துக்கு அழைக் கின்றார். அவர் சி.ஐ.டியினருடன் தான் நேரடி விவாதத்தை நடத்த வேண்டும்.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற குடிவருவோர் - குடியகல்வோர் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ சி.ஐ.டிக்கு விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டால் நவலக்க வைத்தியசாலையில் சென்று படுத்துக்கொள்கின்றார். அவ்வாறானவர் விடும் சவால்களுக்கு முகங்கொடுக்க நாம் தயாரில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விசாரணைகளில் நாம் தொடர்புபடவில்லை. அதேபோன்று தாக்குதலுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. குற்றப் புலனாய்வுத்துறையினர் இந்த இரண்டிலும் தொடர்புடையவர்களிடம்தான் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஹரின் பெர்னாண்டோ இந்த விசாரணைகளுடன் தொடர்புடையவர் . அதனால் அவர் விவாதத்துக்குச் செல்ல வேண்டுமென்றால் சி.ஐ.டி. அதிகாரிகளுடன்தான் செல்ல வேண்டும் எம்முடன் அல்ல.

விசாரணைகள் என்பது அரசியல் கடமையல்ல. இது பொலஸாரின் கடமை என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும்” - என்றார். (இ)

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# கொச்சிக்கடைக் குண்டுதாரியின் தந்தையை விடுவித்தது நீதிமன்று

கொழும்பு, ஓக. 08

2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் போது கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரியாகக் கருதப்படும் அலாவுதீன் அஹமட் என்பவரின் தந்தையை விளக்கமறியலில் இருந்து விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான அகமது லெப்பை அலாவுதீன் சுமார் ஒன்றரை வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபருக்கு எதிராக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கான சட்டமா அதிபரின் ஆலோசனையைக் குற்றப் புலனாய்வு பிரிவு முன்னர் கோரியிருந்தது.

அதன்படி, சந்தேகநபருக்கு எதிராக எந்த ஆதாரமும் முன்வைக்கப்படாததால் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்திருந்தார்.

இதற்கமைய குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தநிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமை சந்தேகநபரை விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (இ)

# வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட வயோதிபப் பெண்ணுக்கு தொற்று

கொழும்பு, ஓக. 08

பாணந்துறை, வேகட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த 85 வயதான வயோதிபப் பெண் ஒருவர் அவ்வீட்டினுள் இருந்தது சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது.

இப்பெண், தனது வீட்டினுள் கதிரையொன்றில் விழுந்துகிடப்பதைக் கண்ட அயலவர் ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஒன்றிணைந்து சடலத்தைக் கைப்பற்றி பாணந்துறை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

குறித்த வயோதிபப் பெண், ஓய்வுபெற்ற ஆசிரியர்களான தம்பதியினருடன் அவ்வீட்டில் நீண்டகாலமாக வசித்து வந்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

மேற்படி வயோதிபப் பெண் கடந்த மூன்று நாட்களாக குறித்த வீட்டினுள் தனிமையில் இருந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அப்பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கருத்துத் தெரிவிக்கையில்,

“உயிரிழந்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது எனத்தெரியவந்துள்ளது.

பெண்ணின் சடலம் பாணந்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளுக்கமைய சடலத்தை அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்றார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 53,453 பேர் இதுவரை சிக்கினார்கள்

கொழும்பு, ஓக. 08

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 94 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



இதனைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 453 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)




# ஒற்றுமை; ஈழத்தின் கானல் நீர்!

## இரண்டாவது வட்டுக்கோட்டை தீர்மானம் எதற்கு?

கடந்த சில நாட்களாக என் மனதில் இரு விவகாரங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றை என் ஈழ நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

தமிழ் தேசியவாதிகளும் அரசியல் தலைவர்களும் கலந்துகொண்ட ஒரு 'சூம்' கூட்டத்தில் 'இரண்டாவது வடக்குக்கோடை தீர்மானம்' ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஒகஸ்ட் முதலாம் திகதி நடந்த இந்தக் கூட்டத்தில், இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்களின் சுயநிர்ணய உரிமைக்காக இந்தியா தலையிடவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்படும் என்று தெரிகிறது. பெரும்பாலும் எல்லா முக்கியமான ஈழ அரசியல் தலைவர்களும், கூட்டத்தில் பங்கேற்பதற்கான அழைப்பைக் கண்டுகொள்ளவில்லை. சிலர், இந்தியாவிடம் கோரிக்கை வைப்பது ஏன் என்று கேள்வி எழுப்பினார்கள். வேறு சிலரோ, 1976இல் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் சரியானதாக இருந்தும், அதுவே இன்னும் நிறைவேற்றப்படாத சூழலில் இன்னொரு தீர்மானம் எதற்கு என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். வேறு சிலரோ, இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா குறுக்கிடுவதற்கான ஒரு முயற்சியாகத்தான் இந்த சூம் சந்திப்பு நடக்கிறது என்று தீர்மானமாகக் கூறினார்கள். சமீபகாலமாக இலங்கை மீதான தன்னுடைய அதிகாரம் கைநழுவிப் போவதாலும், அது சீனாவின் பிடிக்குள் வருவதுபோலத் தோன்றுவதாலும், இந்தியாவே இதை முன்னின்று நடத்துகிறது என்று சிலர் கூறினார்கள்.

சந்திப்பில் இருந்த பெரும்பாலானோர் இந்தியர்கள். யார் பங்குபற்றினார்கள், யார் பங்குபற்றவில்லை என்ற விவரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை, அது, ஏற்கனவே பொதுத் தளங்களில் கிடைக்கிறது. ஆனால், இலங்கையிலிருந்து சிவாஜிலிங்கம், வேலன் சுவாமிகள், அனந்தி சசிதரன் ஆகிய மூவர் மட்டுமே பங்கேற்றார்கள். அதோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டிலிருந்து பலர் பங்கெடுத்திருந்தார்கள். கவிஞர் காசி ஆனந்தனின் முயற்சியால் இது நடந்திருக்கலாம். அவர் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். சென்னை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராமு மணிவண்ணன் மாநாட்டை ஒருங்கிணைத்திருந்தார்.

சிட்னியிலிருந்து இனிய நண்பர் பாலசிங்கம் பிரபாகரன் பல மாதங்களுக்குப் பிறகு திடீரென போன் செய்தார். அவர்தான் இந்த சூம் மாநாடுபற்றி என்னிடம் கூறினார். அதோடு, அவருடைய 'தமிழுணர்வு' யூரியூப் வீடியோ தொகுப்பையும் அனுப்பினார். அதில், இந்த சூம் மாநாட்டை நாம்தமிழர் கட்சித் தலைவர் சீமான் புறக்கணித்தார் என்ற குற்றச்சாட்டு அடங்கியிருந்தது. தன் யூரியூப் ஷோவில் பேசும் பிரபாகரன், இந்த மாநாட்டுக்குத் தன்னை யாரும் அழைக்கவில்லை என்று சீமான் கூறுவது உண்மையல்ல என்று தெரிவிக்கிறார். கூட்டத்தின் சில பேச்சாளர்கள் தனக்குப் பிடிக்காதவர்கள் என்பதால், அவர் மாநாட்டில் பங்கேற்கவில்லை எனத் தெரிகிறது.

சில எண்ணங்கள் உதிக்கின்றன. தமிழர்கள் இருக்கும் வடக்குப் பகுதி, தமிழ்நாட்டுக்கு அருகில் இருக்கும் தீவுகள் உட்பட, இலங்கையில் பரவிவரும் சீன ஆதிக்கத்துக்கு எதிராக, இலங்கை விவகாரங்களில் உள்ளே நுழைய டெல்லியின் ஆசீர்வாதத்தோடு காசி ஆனந்தன் எடுத்த முயற்சிதான் இந்த மாநாடு என்று சில நிபுணர்கள் சொல்கிறார்கள். அது உண்மையாக இருக்குமா? இதைக் குறிப்பிடுபவர்கள் பலரும், முன்பு விடுதலைப் புலிகளின் பொலிட் பீரோ உறுப்பினராக இருந்த காசி ஆனந்தன், இப்போது பல ஆண்டுகளாக சென்னையின் புறநகரில் அமைதியாக இருக்கிறார் என்றும், டெல்லியின் அனுமதியின்றி அவர் இதை செய்திருக்க முடியாது என்றும் கூறுகிறார்கள். ஒருவேளை இது இந்தியாவால் துவங்கப்பட்ட விவகாரமாக இல்லாவிட்டாலும், இந்தியா இதற்கு அனுமதி வழங்கியிருக்கலாம் என்கிறார்கள்

அது உண்மையாக இருக்கும் பட்சத்தில், இந்த முயற்சி கைகூடவில்லை என்றே சொல்லவேண்டும். இலங்கையின் முக்கிய தமிழ்த் தலைவர்களை இந்தியாவால் பங்கேற்கச் செய்யமுடியவில்லை. புலிக் கவிஞரின் சூம் மாநாட்டுக்கு டெல்லி ஆதரவு அளிக்கவில்லை என்றாலும்கூட, இணையத்தில் இவ்வாறு ஒரு கூடுகை நடந்தது இந்திய புலனாய்வுத் துறைக்குத் தெரிந்திருக்கவேண்டும். முக்கிய ஈழத் தலைவர்கள் பங்கேற்கவில்லை எனும்போது, அவர்கள் இந்த முயற்சி வெற்றிபெற எதாவது செய்திருப்பார்கள். இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் தேச ஒற்றுமையை வலியுறுத்துகிறது. ஆகவே, பிரித்தாளுவதற்கான கோரிக்கையை முன்வைக்கும் எந்தக் கூட்டத்திலும் பங்கேற்க முடியாது என்று முக்கிய தலைவர்கள் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

ஆனால், ஒரு கசப்பான உண்மை என்னவென்றால், எந்த முக்கியமான விவகாரமாக இருந்தாலும், ஈழத்தமிழர்கள் ஒன்றுகூட மாட்டார்கள். துப்பாக்கி முனையில் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயத்தை புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நடைமுறைப்படுத்தினார். கடைசியாக அப்போதுதான் தமிழர் ஒற்றுமை மேலோங்கியிருந்தது.

சில வருடங்களுக்கு முன்னால் ஊடகப் பணிகளுக்காக நான் அவுஸ்திரேலியா சென்றிருந்தேன். வேலைகள் முடிந்தபின்பு மெல்போர்னைச் சேர்ந்த இவான்ஹோ பகுதியில் வசிக்கும் ஒரு தம்பதியினர் வீட்டில் ஓரிரு நாட்கள் தங்க நேரிட்டது. நண்பர் மகேசன் எனக்கு ஊர் சுற்றிக் காட்டினார். சிவா-விஷ்ணு கோவிலில் வழிபட்டோம். இந்திய மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஒன்றுபட்ட கூட்டு முயற்சியால் இது கட்டப்பட்டது என்று அவர் தெரிவித்தார். ”1980களில் இது ஒரு மரத்தடியில் இருந்தது. தமிழர்கள் பணம் திரட்டி இந்தப் பெரிய கோவிலைக் கட்டினார்கள். பிறகு, அறங்காவலர் குழுவுக்குள் பூசல் ஏற்பட்டது. ஒரு குழு பிரிந்துபோய் விநாயகர் கோவில் ஒன்றைக் கட்டியது. இரண்டாவது குழுவால் ஒரு முருகன் கோவில்



- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

உருவானது. இதன்பிறகு ஒரு சண்டையிலிருந்து, குன்றத்து முருகனும் எழுந்தார். இங்கு இருக்கும் கோவில்களின் எண்ணிக்கையைப் பார்த்தாலே பெரும்பாலும் இலங்கைத் தமிழர்களுக்கு மத்தியில் உள்ள பூசல் குழுக்களின் எண்ணிக்கை தெரிந்துவிடும்” என்றார்.

மற்ற நாடுகளில் வசிக்கும் ஈழத் தமிழர்களின் கோவில்களுடைய வரலாறும் இதுபோன்றதுதான். புத்திசாலிகளான இந்த மக்கள், கடினமாக உழைக்கிறார்கள். தங்கள் மரபு மற்றும் பாரம்பரியத்தின்மீது உற்சாகத்தோடு இருக்கிறார்கள். ஆனால், அந்த அளவுக்கு அவர்கள் ஒற்றுமையை நாடுவதில்லை. ”எனக்குதான் தலைமை வேண்டும் என்று கேட்பதில் பிரச்னையில்லை. ஆனால், நான்தான்அறிவாளி, மற்றவர்களை முட்டாள்கள் என்று சொல்லிவிடுகிறார்கள்” என்று கசப்புடன் கூறினார் மூத்த தமிழ்த் தலைவர் ஒருவர்.

ஈழப்போர் முடிந்த பிறகு சென்னையின் சவேரா ஹோட்டலில் நடந்த ஒரு மாநாடு நினைவுக்கு வருகிறது. 1983இல் தமிழ்நாட்டுக்கு அகதிகள் வரத்தொடங்கியதிலிருந்து நான் ஈழப் பிரச்சனையைப் பற்றி எழுதி வருகிறேன், மே 2009இல் நடந்த முள்ளிவாய்க்கால் துயரத்தை நேரில் கண்டு விரிவாக எழுதியவன் என்ற முறையில் நானும் பேச அழைக்கப்பட்டிருந்தேன். அன்று நட்சத்திரப் பேச்சாளராக உரையாற்றிய ஓர் அமெரிக்க வழக்கறிஞர் சொன்ன வார்த்தைகளை என்னால் மறக்க முடியவில்லை. ”இந்த அறையில் ஐந்து தமிழர்கள் இருந்தால், அவர்களுக்குள் ஏழு தனித்தனிக் கட்சிகள் இருக்கும்” என்று, ஒற்றுமையின்மையை அவர் சுட்டிக் காட்டினார்.

கோரமான அந்தப் போருக்குப் பிறகு புலம்பெயர் நண்பர்களுக்கு நான் மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன். ஈழ அரசியலில் உத்வேகத்தோடு இருக்கும் அவர்கள், தேசிய மற்றும் அடுத்தநிலை தமிழ் குழுக்கள், அமைப்புகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். பிரபாகரன் இருந்தவரை தமிழ்க்குரல் வலுவாக ஒலித்தது என்றும், அவர் இல்லாததால் புலம்பெயர் மக்கள் அந்த இடத்தை நிரப்பி, ஓர் ஒன்றுபட்ட தமிழ்க்குரலை உருவாக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினேன். போரின் வெற்றிக் களிப்பில் இருக்கும் ராஜபக்ஷகளை சமாளிக்கும் அளவுக்கு இங்கு தமிழ்த் தலைமை வலுவாக இல்லை என்றும், தமிழ் உரிமைகளை நிலைநாட்டவும் இது அவசியம் என்று சொன்னேன். அதை அவர்கள் உடனே ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அதன்பிறகு ஒன்றும் நடக்கவில்லை. குழு பூசல்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

அங்கும், இங்கும், எங்கும் மாநாடுகளையும் போராட்டங்களையும் நடத்துவதில் அவர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஆனால், ஒருங்கிணைந்த உலகக் கூட்டமைப்பு ஒன்றை அமைப்பது என்ற முக்கிய வேலையில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. இதுபோன்ற மாநாடுகள் நம் ஒற்றுமையின்மையை வெளிப்படுத்துகின்றன. முக்கியமான முடிவுகளும் கிடைப்பதில்லை, இவற்றால் என்ன நன்மை விளைந்துவிடும்?

இதுபோன்ற ஓர் உலகளாவிய கூட்டமைப்பு அமைக்கப்படும்வரை ஐ. நா. அமைப்புகளோ ஊடகங்களோ, ஆதிக்கம் உள்ள உலக நாடுகளின் அரசுகளோ ஈழத் தமிழர்களையும் அவர்கள் பிரச்னைகளையும் பொருட்டாக மதிக்கமாட்டார்கள். இது நம் 'தலைவர்களுக்கு' தெரியவில்லையா? இதுபோன்ற ஒரு கூட்டமைப்பு அமைக்கப்பட்டால், அது ஈழத் தமிழர்களுக்கும் நம்பிக்கை தரும். போரால் எல்லாவற்றையும் இழந்து, போருக்குப் பின் இப்போதைய அரசிடமிருந்தும் எதுவும் கிடைக்காமல் இருக்கிறார்கள் அவர்கள். இதைத் தலைவர்கள் உணரவில்லையா?

இலங்கைத் தமிழர்களிடையேயும் புலம்பெயர் தமிழர்களிடையேயும் உள்ள இத்தனை பிரிவுகளுக்கு மத்தியில், சீன ஆதிக்கத்தைக் குறைப்பது, டெல்லியின் மூலம் அழுத்தம் கொடுத்து ராஜபக்ஷவிடம் தமிழர் கோரிக்கைகளை நிறைவேற்றச் சொல்வது போன்ற தன் எண்ணங்களுக்கு, ஓர் ஒன்றுபட்ட குரலாகத் தமிழர்கள் துணைநிற்பார்கள் என்று எப்படி இந்தியா எதிர்பார்க்கிறது?

நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள்: அந்த தொப்புள் கொடி உறவைப் பாதுகாப்பதற்காக மட்டுமே ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற இந்தியா சிரமப்படாது. டெல்லியில் உள்ள தலைவர்களிடம் இந்த உணர்வுபூர்வமான வரலாறெல்லாம் எடுபடாது.

இன்னொருபக்கம், சீனாவின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்கு ஒரு பக்கபலமாக இந்தியா ஈழத்தமிழர்களின் ஆதரவைப் பெற நினைக்கிறது.

அப்படி ஒரு பக்கபலமாகத் தெரியவேண்டும் என்றால், ஈழத்தமிழர்களுக்கான ஒன்றுபட்ட சமூக-அரசியல் தளம் ஒன்று வேண்டும். குறைந்தபட்சம் பிளவுகளாவது பெருமளவில் குறைக்கப்படவேண்டும்.

ஒற்றுமையைப்பற்றி நிறைய நேரம் பேசிவிட்டேன். இந்த வாரத்துக்கான இரண்டாவது விஷயத்தையும் மடை திறந்ததுபோல் சொல்லிவிடுகிறேன். ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஏழு பேரின் விடுதலைபற்றி மீண்டும் பேச்சு எழுந்திருக்கிறது. சில அரசியல் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் இதுபற்றிப் பேசுகிறார்கள், மாநில அரசும் முயற்சி எடுக்கிறது. ஏற்கனவே சிறையில் அவர்கள் 27 ஆண்டுகளைக் கழித்துவிட்டதால் அவர்களை விரைவில் விடுவிக்குமாறு முன்னாள் முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான அரசின் அமைச்சரவை, ஆளுநர் பன்வாரிலால் புரோகித்திடம் 2018 செப்டம்பரில் பரிந்துரை செய்தது. இதுபற்றி இரண்டு ஆண்டுகள் பரிசீலித்தபின், ஆளுநர் முடிவெடுக்கும் பொறுப்பை குடியரசுத் தலைவருக்குத் தள்ளிவிட்டார். சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால் தேர்தல் சூழலை மாற்றியமைக்கவேண்டாம் என்று அவர் நினைத்திருக்கலாம். அப்போதிலிருந்து அந்தக் கோப்பு ராஷ்டிரபதி பவனில் தூங்கிக்கொண்டிருக்கிறது.

ஆனால், குற்றம் சாட்டப்பட்ட ஏழு பேருக்குப் புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது. ஒகஸ்ட் மூன்றாம் திகதி, ஹரியானா மாநிலம் பற்றிய ஒரு வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், 14 ஆண்டுகள் சிறைவாசம் முடிந்த ஆயுள் கைதிகளை விடுவிக்கும் உரிமை மாநில அரசுக்கு உண்டு எனவும், இதுபற்றிய அமைச்சரவையின் பரிந்துரை வந்தால் ஆளுநர் அதை உடனே பரிசீலிக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. ஆகவே, உடனடியாக ஓர் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, இதுபற்றிய பரிந்துரையை ஆளுநருக்கு அனுப்புமாறு முதல்வர் மு. க. ஸ்டாலினிடம் பாமக தலைவர் எஸ். ராமதாஸ் கோரிக்கை வைத்துள்ளார். விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் உள்ளிட்ட பல அரசியல் தலைவர்களும் உரிமை செயற்பாட்டாளர் களும் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

இந்த ஏழு பேரின் வாழ்வில் நடந்திருக்கும் மனித உரிமை மீறலுக்கு முடிவு கட்டும் வண்ணம் முதல்வர் உடனே முடிவு எடுப்பாரா என்பதைப் பொறுத்துதான் பார்க்கவேண்டும். பேரறிவாளன் குற்றமற்றவர் என்று என்னால் அடித்து சொல்லமுடியும். சிவராசன் இவரிடம் வாங்கச் சொன்ன 9 வோல்ட் பட்டரி மனித வெடிகுண்டை இயக்குவதற்கானது என்றும், படுகொலையை இவர் முன்பே அறிந்திருந்தார் என்றும் சிபிஐ குற்றம் சாட்டியதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். இதைப்பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் பேசலாம், குண்டுவெடிப்பை நேரில் பார்த்தவன் நான்.

■ ஆ. விஜயானந்த்

**“ தி.மு.க. அணியுடன் பாட்டாளி மக்கள் கட்சி நெருங்கி வருவதாகவும், “ஊரக உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. அணியில் அதிகப்படியான இடங்களைப் பெறுவதற்கான உத்தியாகவும் இது இருக்கலாம் என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள். ”**

# தி.மு.கவோடு நெருங்குகிறதா பா.ம.க? அ.தி.மு.கவை குழப்பிய 3 சம்பவங்கள்

**என்ன நடக்கிறது அ.தி.மு.க-பா.ம.க கூட்டணியில்?**

**காட்சி 1:**

ஜூலை 25, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ராமதாசின் 83ஆவது பிறந்தநாள். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் ராமதாஸை தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். இதற்குப் பதில் அளித்த ராமதாஸ், உங்கள் தந்தை என்னுடன் மிகவும் நெருக்கமான நட்பு கொண்டிருந்தார். பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக போராட அவரைவிட்டால் வேறு யாருமில்லை என அனைவரிடமும் கூறுவார். பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக பல திட்டங்களை அவர் செயல்படுத்தினார். உங்கள் தந்தையின் இடத்தை நீங்கள் அடைய வேண்டும் என ஸ்டாலினை வாழ்த்தியதாக அறிக்கை ஒன்றில் ராமதாஸ் குறிப்பிடுகிறார்.

முதலமைச்சரின் வாழ்த்துக்கு பதில்தானே தெரிவித்தார் என நீங்கள் நினைக்கலாம். ஆனால், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி உள்பட அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் தெரிவித்த வாழ்த்துகளுக்கு நன்றி என ஒற்றை வரியோடு ராமதாஸ் முடித்துக் கொண்டார் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**காட்சி 2:**

“கல்வி, வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கான 10.5 சதவிகித இடஒதுக்கீட்டை தி.மு.க அரசு நிறைவேற்றுமா?” என்ற கேள்வி எழுந்தது. நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அனைத்தையும் ஆராய்ந்த பிறகே முதல்வர் முடிவெடுப்பார் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்திருந்தார். இது பெரும் சர்ச்சையாக வெடித்தது. இதுதொடர்பாக, சட்டமன்றத்தில் பா.ம.க எம்.எல்.ஏக்கள் கேள்வியெழுப்பிய போது, “தமிழ்நாடு அரசு ஆலோசித்து முடிவெடுக்கும்” என்றார் முதலமைச்சர்.

அடுத்து வந்த நாள்களில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகிதமும் சீர் மரபினருக்கு 7 சதவிகிதமும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 2.5 சதவிகிதமும் உள் ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக அரசாணை வெளியிடப்பட்டது. இதனால் உற்சாகம் அடைந்த மருத்துவர் ராமதாஸ், “தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினேன். கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு 10.5 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

கல்வி, வேலைவாய்ப்பில் 10.5 சதவிகிதம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதால் மிக மிக பின் தங்கிய நிலையில் உள்ள வன்னிய மக்களின் நிலைமை படிப்படியாக மேம்படும் என ருவிட்டரில் பதிவிட்டார். கூடவே, இடஒதுக்கீடு சட்டத்தை இயற்றிக் கொடுத்ததற்காக எடப்பாடி பழனிசாமிக்கும் முன்னாள் சட்ட அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். ராமதாஸின் கோரிக்கைக்கு தி.மு.க செவிசாய்த்ததாக இந்தச் சம்பவம் பார்க்கப்பட்டது.

**காட்சி 3:**

தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவுடன் கருணாநிதி உருவப் படம் திறப்பு விழாவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பங்கேற்றார். கடந்த ஒகஸ்ட் 2 ஆம் திகதியன்று நடைபெற்ற இந்த விழாவில், அனைத்து எதிர்க்கட்சிகளும் பங்கேற்க வேண்டும் என்பதில் மு.க.ஸ்டாலின் உறுதியாக இருந்தார். இதையொட்டி எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு அழைப்பு விடுக்கப்பட்டும் அவர் பங்கேற்கவில்லை. அ.தி.மு.கவின் அனைத்து எம்.எல்.ஏக்களும் விழாவைப் புறக்கணித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியை அழைத்தும் அவர் பதில் அளிக்காமல் பங்கேற்க மறுத்தது தொடர்பாக தி.மு.க பொதுச் செயலாளர் துரைமுருகன் நீண்ட விளக்கமும் கொடுத்தார். அதேநேரம், பாட்டாளி மக்கள் கட்சியின் ஐந்து எம்.எல்.ஏக்களும் விழாவில் கலந்து கொண்டனர். ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடக்கவுள்ள 9 மாவட்டங்களில், வட தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் பா.ம.கவின் தயவு, அ.தி.மு.கவுக்கு மிக அவசியம் என்று பார்க்கப்படுகிறது. தி.மு.கவுடன் நெருங்குவது போன்ற தோற்றத்தைக் காட்டினால் அ.தி.மு.கவிடம் உள்ளாட்சியில் அதிக இடங்களைப் பெறுவதற்கு பா.ம.க. திட்டமிடுகிறதா? என்ற கேள்வியையும் அரசியல் விமர்சகர்கள் முன்வைக்கின்றனர்.

- மேற்கண்ட சம்பவங்கள் சில உதாரணங்கள்தான். “குட்கா விற்பனையை தடுக்க தீவிர சோதனைகள் நடத்தப்படும் என்று மருத்துவத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் கூறியிருக்கிறார் . இது மிகவும் சரியான நடவடிக்கை” என அரசைப் பாராட்டவும் ராமதாஸ் தவறவில்லை. மதுரையில் பென்னிகுயிக் நினைவிட இல்ல சர்ச்சையின்போதும், “மதுரை பாண்டி கோயில் உள்ளிட்ட பல இடங்களில் அரசு நிலங்கள் உள்ளன. அங்கு இப்போது திட்டமிடப்பட்டதை விட இன்னும் பிரும்மாண்டமாக நூலகம் அமைக்கலாம். அதற்காக நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்” என மென்மையாகவே ராமதாஸ் கருத்து தெரிவித்தார்.





**பா.ம.கவின் தயவு தி.மு.கவுக்குத் தேவையா?**

அந்த வரிசையில், “தி.மு.கவை நோக்கி பா.ம.க வருகிறதா?” என தி.மு.கவின் சட்டத்துறை இணைச் செயலாளர் வீ.கண்ணதாசனிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம். “அனைவருக்குமான இயக்கமாக தி.மு.க இருக்கிறது. சாதிய அடிப்படையிலோ சாதிக் கட்சிகளை பார்த்தோ செயல்பாடுகளை வைத்துக் கொள்ளும் கட்சி அல்ல. கடந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகளைப் பார்த்தால் பாட்டாளி மக்கள் கட்சியின் தயவில் ஒரு கட்சி வெற்றி பெற முடிந்ததா என்றால், சாத்தியமில்லை என்பதுதான் உண்மை. 2019 பாராளுமன்றத் தேர்தல் மற்றும் 2021 தேர்தல்களில் அது நிரூபிக்கப்பட்டுவிட்டது” என்கிறார்.

தொடர்ந்து பேசுகையில், தமிழ்நாட்டில் பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சி என்ற அடிப்படையில் அனைத்து மக்களுக்கான இயக்கமாக தி.மு.க இருக்கிறது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் சாதியைப் பார்த்து வாக்களிக்கவில்லை என்பதை நன்றாகவே எடுத்துக் காட்டியது. ஒவ்வொரு சமுதாயத்துக்கும் சேர வேண்டிய சமூக நீதியை கொண்டு சேர்ப்பது என்பது வாக்குகளுக்காக அல்ல, அதை அந்த மக்களின் நலனுக்கானதாகத்தான் பார்க்கிறோம். எங்களுக்குத் தேர்தல் ஆதாயம் என்பது அவசியமில்லை.

தி.மு.க அரசோடு பா.ம.க இணக்கமாக வருவதாகக் கூறுவதெல்லாம் ஓர் அரசியல்ரீதியான பார்வை. எந்தக் கட்சியையும் புறந்தள்ளும் வழக்கம் எங்களுக்கு இல்லை. தேர்தலில் வெற்றி பெற்றவுடன், வாக்களிக்காதவர்களுக்கும் உழைப்போம் என முதலமைச்சர் கூறினார். தொடர்ந்து ஒவ்வொரு பிரச்னையிலும் அனைத்துக் கட்சிகளையும் கலந்து ஆலோசித்த பிறகுதான் செயல்படுத்துகிறார். அது கொரோனா தொற்றாக இருந்தாலும் சரி.. காவிரி விவகாரமாக இருந்தாலும் சரி. அப்படியிருக்கும் போது எங்களுடன் பா.ம.க நெருங்கி வருகிறது என்பதெல்லாம் அரசியல்ரீதியான கருத்துதான். மக்களுக்கான நலத்திட்டங்களை அவர்கள் பாராட்டுவது என்பது இயல்பான ஒன்றுதான் - என்கிறார்.

**ராமதாசுக்கு தெரியும்**

இதுதொடர்பாக, அ.தி.மு.க மாநில செய்தித் தொடர்பு செயலாளரும் முன்னாள் அமைச்சருமான வைகைச்செல்வனிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம். “பாராளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தலில் எங்களோடு பா.ம.க பயணித்தது. தற்போதும் அவர்கள் எங்களுடன்தான் இருக்கிறார்கள். சில கருத்துகளைக் கூட்டணியில் உள்ள தலைவர்கள் சொல்வதாலேயே அவர்கள் வெளியேறுகிறார்கள் என்று கூறுவதையெல்லாம் மாயத்தோற்றமாகத்தான் பார்க்கிறேன். மற்றபடி, எங்களின் கவனம் முழுவதும் உள்ளாட்சித் தேர்தலை நோக்கியே இருக்கிறது. இடஒதுக்கீட்டுக் கொள்கையில் வன்னிய சமூக மக்களுக்காக ஒரு நிலைப்பாட்டை அ.தி.மு.க எடுத்தது. இவையெல்லாம் பாட்டாளி மக்கள் கட்சிக்கு நன்றாகவே தெரியும்” என்கிறார்.

“தி.மு.க கூட்டணியை பா.ம.க நாடுகிறதா?” என பாட்டாளி மக்கள் கட்சியின் பிரசாரக் குழு மாநிலத் தலைவர் எதிரொலி மணியனிடம் பிபிசி தமிழுக்காக கேட்டோம். “தற்போது தோழமைக் கட்சிகளோடு எங்களுக்கு எந்தவிதக் கருத்து வேறுபாடுகளும் இல்லை. இடஒதுக்கீடு விவகாரத்தில் அ.தி.மு.க உரிய முறையில் செய்து கொடுத்தது. அதனை புதுப்பிக்கும் வகையில் அரசாணை வெளியிட்ட தி.மு.க அரசை பாராட்டுகிறோம். இன்றைய சூழலில் தி.மு.கவோடு செல்வதற்கு வாய்ப்பில்லை.

இடஒதுக்கீடு என்பது சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம். இதனை மாற்ற வேண்டும் என்றாலும் சட்டமன்றத்தைக் கூட்டி விவாதம் நடத்த வேண்டும். ஒரு சமூகத்தைப் பகைத்துக் கொள்வதற்கு யாரும் விரும்புவதில்லை. யார் என்ன சொன்னாலும் அ.தி.மு.க அரசு கொண்டு வந்த சட்ட மசோதாவை யாராலும் நீக்க முடியாது. அதனை செயல்படுத்தித்தான் ஆக வேண்டும். இதை வைத்து தி.மு.க, பா.ம.க கூட்டணி உருவாகி வருகிறது எனப் பேசுவதெல்லாம் ஏற்புடையதல்ல” என்கிறார்.

**குழப்பத்தை ஏற்படுத்துகிறதா தி.மு.க?**

“மருத்துவர் ராமதாஸின் செயல்பாடுகளை எவ்வாறு எடுத்துக் கொள்வது?” என மூத்த பத்திரிகையாளர் தி. சிகாமணியிடம் பிபிசி தமிழுக்காக கேட்டோம். “வன்னியர்களுக்கான 10.5 சதவிகித இடஒதுக்கீடு என்பது போதுமானதாக இல்லை என்பதுதான் பா.ம.கவின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால், தி.மு.க அரசு அரசாணை வெளியிட்டதும், அதனை வரவேற்று ராமதாஸ் டுவிட்டரில் பதிவிட்டார். இதன்மூலம், அ.தி.மு.க அணியில் குழப்பங்களையோ பிரிவையோ ஏற்படுத்தும் நோக்கத்தில் தி.மு.க இருக்கலாம்.

தனது பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்த ஸ்டாலினுக்கு, ராமதாஸ் அளித்த நீண்ட பதிலையும் மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்க வேண்டியுள்ளது. இது தி.மு.க. பக்கம் பா.ம.க நெருங்கி வரு வதையே காட்டுகிறது. ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடக்கவுள்ள 9 மாவட்டங்களில் ஏழு மாவட்டங் கள் வடக்கில்தான் வருகின்றன. அங்கு அதிகப்படி யான இடங்களை அ.தி.மு.க கூட்டணியில் பெறு வதும் நோக்கமாக இருக்கலாம். பாராளுமன்றத் தேர்தலில் சில எம்.பிக்களைப் பெற வேண்டிய தேவை இருப்பதால், ஆளுந் தரப்பு பக்கம் இருந்தால் லாபம் என்பதையும் பா.ம.க கணக்கு போடத்தான் செய்யும். கூட்டணிக் கணக்குகள் எல்லாம் தேர்தல் நெருக்கத்தில் தெரிய வரும்” என்கிறார் சிகாமணி.

பி.பி.சி. தமிழ்



# சிவில் உடையில் வந்து கைதுசெய்வதை உடனடியாக நிறுத்தவேண்டும் பொலிஸ்

## அநுரகுமார எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஓக. 08

"ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு வீடுகளுக்குச் செல்வோர், இடையில் சிவில் உடையில் இருக்கும் பொலிஸ ாரால் கைதுசெய்யப்படுவது ஆபத்தானது. இந்த முறையைப் பாதாளக் குழுவினர் பின்பற்றி னால் நிலைமை என்னவாகும்?" - இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் எம்.பியுமான அநுர குமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றை முன் வைத்து கருத்துத் தெரிவிக்கை யிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பிய அநுரகுமார திஸாநாயக்க, மேலும் குறிப்பிடு கையில்,

"ஆசிரியர்கள் ஆர்ப்பாட் டங்களில் கலந்துகொண்ட பின் னர் பல்வேறு பொலிஸ் நிலை யங்களால் கைதுசெய்யப்படு கின்றனர். அவ்வாறு கைது செய்யப்படுபவர்களை ஏன் துறைமுகத்துக்குள் உள்ள பொலிஸ் நிலையத்துக்குள் கொண்டு வருகின்றீர்கள்?. இது பிரச்சினைக்குரியதே. கைது செய்யப்படும் பொலிஸ் நிலை யங்களிலேயே அவர்கள் தடுத்துவைக்கப்பட வேண்டும்.

ஆர்ப்பாட்டங்கள் முடிந்து சென்ற ஆசிரியர்களைக் கைது செய்துள்ளீர்கள். இவர்கள் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் இல்லை. இதன் படி வேண்டுமென்றே கைது செய்ய முன்னெடுக்கப்படும் நடவடிக்கையே இது.

இதேவேளை பல்கலைக் கழக மாணவர்கள் கைதுசெய் யப்படும் முறையும் பிரச்சினைக் குரியது. ரி - சேர்ட்டுகளுடன் பஸ்களில் ஏறி சோதனை நடத் திக் கைதுசெய்யப்படுகின்றனர். ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் ஒருவரைக் கைதுசெய்வதற்கு முயற்சிக்கப்பட்டது. அதற்கு வந்தவர்கள் சீருடை எதுவு மின்றி ரி - சேர்ட்டுகளுடன் வந்து கைதுசெய்கின்றனர்.


அதேபோன்று ஸ்ரீ ஜயவர்த் தனபுர பல்கலைக்கழகத்தில் இன்னுமொரு மாணவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரையும் சிவில் உடையில் சென்று வெள்ளை வானில் கைதுசெய்து கொண்டு சென் றுள்ளனர். இது கடத்தலே ஆகும்.

சிவில் உடைகளில் சென்று கைதுசெய்யும்போது நீங்கள் பொலிஸார் என்பதை உறுதி செய்யுங்கள் எனக் கேட்டாலும் அவ்வாறு அவர்கள் தங்களை யாரென வெளிக்காட்டுவ தில்லை

யாரேனும் பாதாளக் குழு வைச்சேர்ந்தோர் இவ்வாறு வந்து வீதியில் செல்வோரைத் தூக்கிச் செல்ல நடவடிக்கை யெடுத்தால் என்ன செய்வது? நீங்கள் உத்தியோகபூர்வ அர சாக அல்லாது காட்டுப் பொலி ஸார் போன்றே கைதுசெய் கின்றீர்கள். இதனால் கைது நட வடிக்கைகளை அதற்குறிய முறைகளுடன் செய்ய வேண்டும்" - என்றார். (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 20 - 09 - 1927



உதிர்வு 31 - 07 - 2021

### கந்தையா ஆறுமுகம்

*(முன்னாள் இலங்கை வங்கி ஊழியர் - தலைமன்னார், உரிமையாளர் சரஸ்வதி ஸ்ரோர்ஸ்- கொழும்பு)*

யாழ்.இணுவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், கொழும்பு கொட்டாஞ்சேனை, கனடா Montreal ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் 31.07.2021 சனிக்கிழமை கனடா Montreal இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் – சின்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் – தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இந்திரபூபதி அவர்களின் அன்புக் கணவரும்,காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, மாணிக்கம், செல்லையா, தம்பையா, பார்வதி, தில்லையம்பலம் ஆகியோரின் பாசமிகு இளைய சகோதரரும், திருமகள், ஆறுமுகதாசன், சிவதாசன், அம்பிகை, அருந்ததி (அருணா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,குணராஜன், மாலினி, சௌந்தரராஜன், குமுதினி, சுவேந்திரன் ஆகியோரின் நேசமிகு மாமனாரும், சற்குணசிங்கம்(வேலாயுதபிள்ளை) – தவமலர், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வேலுப்பிள்ளை, ஆச்சியம்மா, சின்னத்தங்கச்சி, துரையப்பா, தங்கம்மா, பூபாலசிங்கம், பத்மாவதி, துரைவீரசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரூபினி–சுஜிவன், விசாகன், கிறிஸ்ணி– அபர்நாத், மீரா, ஆரணி, ஜனனி, வாருஷா, மோகன், சாய்பிரியா, சாய்சிவன்யா, சேயோன், ஆதித்தன், அபிராம் ஆகியோரின் ஆசை தாத்தாவும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 08 Aug 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Monday, 09 Aug 2021 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Monday, 09 Aug 2021 10:30 AM
Highland Hills Funeral Home and Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

RIPBOOK ஊடாக இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
தாசன் - மகன் Mobile : +14165431884

தகவல்:
குடும்பத்தினர்.

## பாகிஸ்தான்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

61 சொகுசு கார்களை ஏலம் விட்டதில் 200 மில்லியன் ரூபா வருவாய் வந்தது. ஒரு பிரதம ருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 524 பணியாளர்களுக்கு பதிலாக இரண்டு பணியாளர்கள் போதும் என்று அறிவித்தார் இம்ரான். பிரதமர் இல்லத் திலிருந்த 8 எரு மைகள் ஏலம் விடப்பட் டதில் 25 லட்சம் ரூபா கிடைத்தது.

எளிமையை செயல்படுத்தவே ஒரு செயலாற்றுக் குழு அமைக் கப்போவதாக இம்ரான் கான் அறிவித்திருக்கிறார். பிரத மர் வீடு தவிர பல அரசு கட்டடங் களை பொதுக் கட்டடங்களாக மாற்றும் திட்டம் இருந்தது. முரி மற்றும் ராவல் பிண்டியில் உள்ள பஞ்சாப் வீடு, லாகூர், கராச்சியில் உள்ள கவர்னர் மாளிகை, எல்லா மாகாணங்களிலும் உள்ள பிரதமர் வீடுகள் போன்ற பல கட்டிடங் கள் பட்டியலில் இருந்தன. ஆனால் இந்தத் திட்டம் நிறைவேறவில்லை.

**பிரபலத்துக்காகவா பொருளாதார சிக்கலா?**

இம்ரான் கானின் எளிமைத் திட்டங்களால் பிரதமர் வீட்டுக் கான செலவுகள் பெருமளவில் குறைந்திருக் கின்றன. இவை நல்ல முயற்சிகள்தான் என்றாலும் சரிந்துகொண்டிருக்கும் பொரு ளாதாரத்துக்கு இவை தீர்வாகாது என்கின்றனர் வல்லுநர்கள்.

பொருளாதார மீட்சிக்கு இம்ரான் கானிடம் எந்தத் திட் டமும் இல்லை என்றும், அதை மூடி மறைக்கவே இந்த எளிமை வேடம் போடப்படுகிறது என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டு கின்றன. மக்களை திசைதிருப்ப அவர் இப்படி செய்கிறார் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால், இம்ரான் கானின் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் திட்டங் கள், ஏழைக்கும் பணக்காரர்களுக் குமான வேறுபாட்டைக்குறைத்து, நீதியுள்ள ஒரு சமூ கத்தை வடி வமைப்பதில் அவருக்கு உள்ள ஆர்வத்தையும்பொதுப்பணத்தின் மேல் அவர் வைத்தி ருக்கும் மதிப்பையும் காட்டுகின்றன.

எளிமைக்கான ஒரு முன்னெ டுப்பை தேசத்தலைவர்கள் மேற் கொள்வது இது முதல்முறை அல்ல. ராணுவ சர்வாதிகாரி ஜியா உல் ஹக், முன்னாள் பிரத மர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் இதுபோன்ற முயற்சிகளை செய் திருக்கிறார்கள். ஆனால் அவை நீண்டகாலத் தாக்கத்தை ஏற்ப டுத்தவில்லை.

## மரண அறிவித்தல்

மலர்வு 25 - 07 - 1933



உதிர்வு 03 - 08 - 2021

### திருமதி நேசரெத்தினம் தம்பிராசா

எருவில் கிழக்கு பாரதிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசரெத்தினம் தம்பிராசா 03.08.2021 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – சங்குவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலிப்போடி – செம்பகணாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம், சீதாலெட்சுமியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்தம்பி, கனகரெத்தினம், இராசதுரை, இளையதம்பி, தெய்வானை, குணநாயகி மற்றும் குமாரப்போடி, பொன்னம்மா, சௌந்தரி, பூபதி, சீவரெத்தினம், காந்தமலர் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, ஏகாம்பரம், மைலிப்போடி, ஆறுமுகம், யோகராஜா மற்றும் செல்வராசா, வையாளிப்போடி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, நீலவேணி, மகேஸ்வரன் காலஞ்சென்றதில்லேஸ்வரன், செந்தூர் (London), பத்மினிதேவி, கயிலைநேசன், கதிர்காமவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் இராசநாயகி, வேதநாயகி, அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், செல்வநாயகம், கிருபையம்மா, ஜயாத்துரை, புஸ்பவதி, அருணா (London), ஈஸ்வரன், உசாநந்தினி, சுகிதாசினி, மகேந்திரன், உதயகுமார், பேரின்பராசா ஆகியோரின் அன்புமாமியாரும், ஜீவராணி (ஆசிரியர் – வம்மிவட்டுவான்,வாகரை) தவேந்திரன் (தாதிய உத்தியோகத்தர் – களு வாஞ்சிகுடி), தேவரூபன் (விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர்), நிமல்ராஜ்,குணராஜ், ஜதுஸ்ராஜ், ரூபகாந்தன், துயந்தன்,கிருஸ்ரின் (மாவட்டநீதிமன்றம் – திருகோண மலை), வினேஸ்காந், சிவகுமார், சுகந்தினி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும்,வேதரூபி, துஷாந்தினி, உருத்திராங்கரன், குணாநிதி, தர்சினி,தினேகா,பிரியா, லக்சிகா, ஆஹாஸ் பொருளியலாளர் London), அக்ஷயா (London), அஸ்வினி, டசாந், சிவசுப்பிரமணியம், துசாந்தினி, நிதர்சினி (தென்னை அபிவிருத்திஉத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், திவானு,பவிஷாந், ஆதிஷா, ஜஸ்மிகா, வவிசனா, லக்ஷித், லஸ்விந், கரிசினி, அக்ஷாத், திபிக்ஷா, சஸ்விதா, கிந்துஜன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# ஹேமசிறி, பூஜிதவுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்க!

## கொழும்பு மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஒக. 08

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேம சிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்யு மாறு கொழும்பு மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தத் தாக்குத லைத் தடுப்பதற்கு புலனாய்வுத் தகவல் கிடைத்தும் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய காரணத் தால், தமது பொறுப்பை அலட்சியம் செய்து அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் குறித்த இரண்டு பேருக்கும் எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தக் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்வதற்காகவென இம்மாதம் 27ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்படும் என மூவர டங்கிய நீதிபதிகள் குழாம் அறி வித்துள்ளது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத் திரக் ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற் கொலைத் தாக்குதல் களில் 300 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந் திருந்தனர்.

இந்நிலையில், முன்கூட் டியே புல னாய்வுத் தகவல்கள் தெரிந்து அதனை தடுக்கத் தவறி யதாகக் குறிப்பிட்டு சம் பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று வழக் குத் தாக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த வழக்கு நேற்றுமுன் தினம் நாமல் பலல்லே, ஆதித்ய படபெதிகே மற்றும் மொஹ மட் இர்ஷதீன் ஆகிய மூவர டங்கிய நீதிபதிகள் முன்னிலை விசாரணைக்கு எடுக்துக்கொள்ளப் பட்டது.

இதன்போது குறித்த வழக்கின் பிரதி வாதிகளான முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகிய இருவரும் நீதி மன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

இவ்வேளையில் குற்றம் சாட்டப் பட்ட ஹேமசிறி பெர் னாண்டோ மற்றும் பூஜித ஜய சுந்தரவை பிணையில் விடுவிக்க மூவரடங்கிய நீதிபதிகள் குழு உத்தரவிட்டது.



இந்நிலையில் குறித்த இருவ ரினதும் கைவிரல் அடையா ளத்தைப் பெற்று அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டனர்.

இதனிடையே, இந்த வழக்கு விசார ணையில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ், குற்றம் சாட்டப்பட்ட வர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மீண் டும் மறுபரிசீலனை செய்து குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்ய கால அவகாசம் அளிக்குமாறு கோரினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் குழாம், எதிர்வரும் 27ஆம் திகதி குறித்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும், அன்றைய தினம் சம்பந் தப்பட்ட குற்றச் சாட்டுக்களைத் தாக்கல் செய்யவும் உத் தரவிட்டது. (இ)

# வவுனியா பல்கலைக்கழகத்தின் ஆரம்ப நிகழ்வுகள் ஒத்திவைப்பு

வவுனியா, ஒக. 08

வவுனியா பல்கலைக்கழகத்தின் ஆரம்ப நிகழ்வுகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக வவு னியா வளாகம் தனியான பல்கலைக்கழகமாக அண்மையில் தரமுயர்த்தப்பட்டது.

இந்நிலையில், அதன் ஆரம்ப விழாவை எதிர்வரும் 11ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நிகழ்வின் முதன்மை விருந்தினராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொள்ள விருந்தார்.

ஆயினும். கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக அரச நிகழ்வுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள் ளமை யால் குறித்த நிகழ்வும் மறு அறி வித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட் டுள்ளது. (இ)

# பருத்தித்துறையில் இருவர் உட்பட குடாநாட்டில் நேற்று மூவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக. 08

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று உயிரிழந்த மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவர் கள் மூவருக்கும் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

அவர்களில் இருவரின் மாதிரிகள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு ஊடாக யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்கள் 54 மற்றும் 68 வயதுகளையுடைய ஆண்களாவர்.

அதேபோல் உயிரிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட 73 வயதுடைய பெண் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என நேற்றைய பரிசோதனை அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# யாழில் பிறந்து ஒரு நாளேயான பச்சிளங்குழந்தைக்கும் தொற்று

யாழ்ப்பாணம், ஒக. 08

யாழ்ப்பாணத்தில் பிறந்து ஒரு நாளே யான குழந்தை ஒன்றுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட் டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் பிறந்த குழந்தைக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

குழந்தையும் தாயும் தனிமைப்படுத் தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் குழந்தைக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும், அதன்போதே தொற்று உறுதிசெய் யப்பட்டுள்ளது எனவும் வைத்தியசாலை கொரோனா பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பிரிட்டன்...

வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மக் களுக்கு அவர்களின் சொந்தக் காணி களை மீள வழங்குவது உள்ளிட்ட மனி தாபிமான நடவடிக்கைகள் முடிந்தளவு முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும், இவை தொடர்பில் சர்வதேச சமூகத் தைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது எனவும் வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களுக்கு அவர்களின் சொந்தக் காணி களை மீள வழங்குவது உள்ளிட்ட நடவ டிக்கைகள் முடிந்தளவு முன்னெடுக்கப் பட்டிருக்கின்றன எனவும், இவை தொடர்பில் சர்வதேச சமூகத்தைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது எனவும் வெளிநாட்டு அமைச் சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகள், காணி விடுவிப்புகள் மற்றும் இது தொடர்பில் கடந்த ஜெனிவா மனித உரிமைகள் சபை யின் கூட்டத் தொடரில் இலங்கையின் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்படி கூட்டத்தில் தெரிவித்தார்.

"உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் ஊடாக சாட்சிகள் பதிவு செய்யப் பட்டு வருகின்றன. இதன் இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக் கப்பட்டுள்ளது. அதில் அவசியமான காரணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதே காரணிகளை ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதுவருக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என வும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் கூறினார். (இ)

## அநாவசியமாக...

வேறு விடயங்களுக்காக வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்.

■ திருமணங்கள், இறுதிச் சடங்குகள் மற்றும் பிற விழாக்களில் பங்கேற்பதை முற்றாக நிறுத்தவும்

■ பொது இடத்துக்குச் செல்லும் போது முகக்கவசம் (மாஸ்க்) அணிவது மிகவும் அவசியம்.

■ அறைகள், அரங்குகள், மின்தூக்கி (லிஃப்ட்) மற்றும் வாகனங்கள் போன்ற மூடப்பட்ட பகுதிகளில் கூட்டமாக இருப்பதைத் தவிர்க்கவும்.

■ அவ்வப்போது கைகளைச் சவர்க்காரம் கொண்டு கழுவுவதோடு, மற்றையவர்களிடமிருந்து இரண்டு மீற்றருக்கு மேல் இடைவெளியைப் பேணுங்கள்.

■ நாட்பட்ட நோய்களை கொண் டுள்ளவர் வீட்டை விட்டு வெளியேறு வதைத் தவிர்க்க வேண்டும்

- இவ்வாறு அரச தகவல் திணைக் களம் அறிவுறுத்தியுள்ளது. (இ)

## சிறுவர்களை...

தற்கிடையில், நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற குழந்தை மருத்துவ வல்லுநர் தீபால் பெரேரா, கொவிட்-19 வைரஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை வீட்டில் எப்படி பராமரிப்பது என்பது குறித்து தனது கருத்துக்களை தெரிவித்தார்.

நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பது கட்டாயமாக் கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கோவிட் -19 தொற்று உள்ள குழந்தைக்கு சத்தான உணவுகளை வழங்கவேண்டும் என்றும் குழந்தை மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா குறிப்பிட்டார்.

## நாளொன்றுக்கு...

கூறியுள்ளார்.

எனினும் நாம் தற்போது சரியான சுகாதார நடைமுறைகளைக் கடைப் பிடிக்காது தொடர்ந்தும் இவ்வாறான விதத்திலேயே செயற்பட்டு வந்தால் நாளொன்றுக்கு 200 முதல் 300 வரை யான உயிர்களை இழக்க நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத் துள்ளார்.

கடந்த காலங்களில் எமது தாமத மான செயற்பாடுகளினால் நாம் அநேக மான உயிர்களை இழந்துவிட்டோம் எனவும் பேராசிரியர் சுனெத் அகம் பொடி தெரிவித்துள்ளார்.

## நேற்றும்...

துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயி ரத்து 487 பேர் குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து நேற்று வெளியே றியுள்ளனர்.

இதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குண மடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரத்து 794 ஆக உயர் வடைந்துள்ளது. (இ)

## ஒட்சிசன்...

கோவிட் தொற்றுநோய் தொடர்பான ஒரு முக்கியமான சூழ்நிலையை நாடு அடைந்திருக்கிறதா என்று ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோது, பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை புறக்க ணிப்பதன் மோசமான விளைவுகளை பற்றி ஒரு வாரத்திற்கு முன்பு எச்சரித் ததாக கூறினார்.

## கொரோனா..

பெறமுடியும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.


இதேவேளை, டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளரும் விசேட வைத்திய நிபுணருமான ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.



# யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆலய

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2021

## யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வம் வீரமாகாளி நல்லூர் இராசதானியில் தேரேறி அருள் பாலிக்கிறாள்



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆலயம் சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலமாகும். நாற்றிசையும் புகழோங்கத் தமிழையும் சைவத்தையும் ஒருங்கே வளர்த்து ஆட்சி செய்து வந்த சக்கரவர்த்திகளால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆலயம் நல்லூர் இராசதானியின் எல்லைக்கு அண்மையில் இருந்ததால் நல்லூருக்குள் நுழைய முயன்ற அன்னியருடன் நடைபெற்ற போர்கள் பல இந்தப் பகுதியில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இதுபற்றி யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் கூற்றிலிருந்து அறிமுடிகின்றது.

**யாழ்ப்பாண மன்னர்கள் வழிபட்ட தெய்வம் வீரமாகாளி**

யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாக வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அந்தக் காலத்திலிருந்தே இந்த ஆலயம் சிறப்புப் பெற்று விளங்கி வருகின்றது. மன்னர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக்கலன்களை கொலுவில் வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தார்கள்.

**இலங்கையில் முதல் முதலில் மகிடாசூர சங்காரம் நடைபெற்ற அம்மன் ஆலயம்**

இலங்கையில் முதல் முதலில் மகிடாசூர சங்காரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இவ் வாலயத்துக்கு உண்டு. வடக்கு வாயில் நோக்கி அமைந்துள்ள வீரமாகாளி அம்மன் ஆலயம் யாழ்.நகரிலிருந்து பருத்தித்துறை வீதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

**பிரமாண்டமான இராஜகோபுரத்துடன் அமைந்த திருக்கோயில்**

கோயிலின் உள்ளே புகுந்ததும் கண்ணைக் கவர்வது அங்குள்ள கொடித்தம்பம் ஆகும். ஆலய உட்பிரகாரத்தில் கிழக்கு வீதியில் யாக சாலையும், வாகன சாலையும் தெற்கு பிரகாரத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ள விநாயகர், நாகதம்பிரான், மகாவல்லி சமேத சுப்பிரமணியரும், மேற்குப் பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு சனீஸ்வரர் ஆலயமும் பிரதான வடக்கு நோக்கிய வாசலில் சப்த தளங்களைக் கொண்ட வானளாவ உயர்ந்த இராஜகோபுரம்.

மணிமண்டபம், கம்பீரமாகக் காட்சியளிக்கும் தேர் முட்டி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகுறு தீர்த்தத் தடாகம், வைரவப் பெருமாள் ஆலயம் அன்னை பூரணி மடாலயம் போன்ற அமைப்புக்களைக் காணலாம்.

**கருவறையில் கருணாம்பிகை**

ஆதிமூலம் எனும் கருவறையில் கர்ப்பக்கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள கிலா விக்கிரகம் கருணாம்பிகை வடிவமாகியுள்ளது. மூர்த்தி கரமான வடிவத்தில் மகிடாசூரமர்த்தினி எனவும் கூறப்படுகிறாள்.



**தமிழ் ஆச்சாரியார்களால் முதலாவதாக செய்யப்பட்ட தேர்**

அம்பிகையின் ஆலயத்தில் காணப்படும் தேர் வரலாற்றுச் சிறப்பைக் கொண்டு விளங்குகின்றது. 1941 ஆம் ஆண்டு இந்தத் தேர் அமைக்கப்பட்டது. இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழ் ஆச்சாரியார்களால் செய்யப்பட்ட முதலாவது தேர் இதுவாகும். விநாயகர் ஆறுமுகம் என்ற சிற்பாச்சாரியாரே இந்தத் தேரை அமைத்தார். இந்தத் தேர் வெள்ளோட்டம் விடப்பட்டவேளை தேர் அசைய முடியாமல் நின்ற பொழுது வெள்ளை நிற ஆடையுடன் அங்கு வந்த வயதான மூதாட்டி அந்தச் சிற்பாச்சாரியாரிடம் ஐந்து ரூபா காசு கொடுத்து விட்டு மறைந்த பின் அந்தத் தேர் அசைந்தது என்று கூறப்படுகின்றது.

இந்த ஆலயத்தில் அழகிய திருமஞ்சம் புஸ்பரதம், சப்பறம் கண்ணைக் கவரும் பல வாகனங்கள் எல்லாம் அம்பிகையின் ஆலயத்துக்கு சிறப்புக்களைப் பெருக்கி நிற்கின்றன.

மகோற்சவ காலங்களில் ஒவ்வொருநாள் உற்சவமும் விசேடமானது. இவ்வாறாக வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டு விளங்கும் வண்ணை வீரமாகாளியம்பாளின் தேர்த்திருவிழா இன்று (2021.08.08) ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தினமான இன்று நடைபெறுகிறது.

வர்ணனைக் கலாநிதி
– செந்நாப்புலவர், மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்
ஆசிரியர், ஓம் ரீவி பிரதம வர்ணணையாளர்.(M.A. சைவ சித்தாந்தம்)

சகல மிளகாய்த்தூள் வகைகள், சரக்குத் தூள்,
வறுத்த கூட்டுத்தூள், பச்சை கூட்டுத்தூள், கட்டர் தூள்,
இறைச்சிக் கறித்தூள், மஞ்சள்தூள், நச்சீரகத்தூள்,
கறிமிளகாய்தூள், மீன்கறித்தூள், தனி மஞ்சள்தூள்,
மல்லித்தூள், தனி பச்சைத்தூள், நாவல்கோப்பி,
வெந்தயத்தூள், கோப்பிவகை, வேர்க்கொம்புத்தூள்,
உணவுத் தேவைக்குரிய சகல தூள்வகைகள் மற்றும்
அனைத்து தூள் வகைகளையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெறுக் கொள்ள நாட வேண்டிய இடம்

ரமணி அரைக்கும் ஆலை

இல. 49, 51, 4 ஆம் குறுக்குத் தெரு,
குருநகர், சின்னக் கடை, யாழ்ப்பாணம்.

அம்பாள் மரக்காலை
Ambal Timber Depot
Regd No: NA/DS/842 Forest Read No: TD/174/V
No.261, Point Pedro Road,
Veeramakali Amman Kovilady, Nallur, Jaffha.
T.P: 021 222 0045, 0777 111 147, 077 889 4200, 077 007 6555

தேசிய லொத்தர் சபை
S.K. திலகவதி யாழ்ப்பாணம்
அனைத்து லொத்தர்களையும், மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
No. 4, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்

அம்பாள் வெதுப்பகம்
Ambal
Bake House
No: 252, Point Pedro Road,
Jaffna, Sri Lanka.
021 222 3255

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-பண்டிதர் திருநாவுக்கரசு




7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- உன்னைத்தேடி
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை - நாடளாவிய ரீதியில் அதிபர் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் தொழில்சங்க போராட்டம்




**இரவு**

7.00 மணி : சுப்பர் குறுாப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சி ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு